365

முரசொலி

வார இதழ்.

ஆசிரியர் மு. கருணாநிதி.

2 அணா

முரசு 2 | சென்னை | 28—10—55 | வெள்ளி | ஒலி 31

கோடு போடச் சொன்னோம்— கேடு புரிந்திருக்கிறார்கள்!

கொல்லைக்கு வேலிபோடச் சொல்லி அனுப்பப்பட்ட ஆள், 'பக்கத்து வீட்டுப் பழமரம் இங்கு இருந்தால் பரவசமாயிருக்கும்; அதற்கும் சேர்த்து முள் சுற்றட்டுமா?' என்று கேள்விக்குறி எழுப்பினால் எப்படி இருக்கும்?

அப்படித்தான் இருக்கிறது மாநிலப் புது அமைப்புக் குழுவினர் தெரிவித்திருக்கும் சில அபிப்பிராயங்கள்!

தேவிகுளம்-பீர்மேடு போன்ற தமிழ் நாட்டுப் பழமரங்களை மலையாளத் தோட்டத்திற்குள் சேர்த்து பசுல் அலிக்குழு வேலி பின்னியிருப்பதையல்ல, நாம் குறிப்பிடுவது! இந்த முடிவு நாம் எதிர்பார்த்ததுதான். குழுவிலே அங்கம் வகிக்கும் கே. எம். பணிக்கர் ஒரு மலையாளி; அவருக்கு பீர்மேடு-தேவிகுளம் பகுதியிலே 'எஸ்டேட்' ஒன்றே இருக்கிறதாம்!—அவரையும் அணைத்துக் கொண்டிருப்பதுதான், பசுல் அலிக் குழு! அத்தகையோரிடமிருந்து நாம் எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும்?

மலையாளிகள் அவருக்கு சொந்தக்காரர்கள் என்பது மட்டுமல்ல; சொந்த உடைமையும் அங்கே இருக்கும்போது அந்தப் பகுதிகளைத் தமிழகத்துக்குத் தந்துவிட பணிக்கர் என்ன, தன்னலம் மறந்த புத்தரா? மகாத்மா காந்தியா?—எனவேதான் நாம் அந்த முடிவு கண்டு ஆச்சரியக் கடலில் ஒரேயடியாக வீழ்ந்துவிடவில்லை!

'எம்ப்டி பாக்கெட்'!



அரசியல் வானில் அணையாத ஜோதியாய் பிரகாசிப்பதற்கு அந்தஸ்து தேவையில்லை; பொதுமக்கள் ஆதரவுதான் வேண்டும்.

ஆனால் பொதுமக்கள் ஆதரவோ விலை உயர்ந்த பண்டம். அதை வாங்குவதற்கு நல்ல கோள்கை—என்னும் திரவியம் வேண்டும். தெளிவுள்ள கொள்கையென்னும் காசு பணம் இல்லாவிட்டால் பொதுமக்கள் ஆதரவைப் பெறமுடியாது!

ஆனால், கொள்கையைப் பொறுத்தவரையில் 'எம்ப்டி பாக்கெட்டு'களாய் விளங்கும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினர்தான் சில நாட்களுக்கு முன் மைசூரிலே கூடி, பொதுமக்கள் ஆதரவைப் பெறவேண்டும் என்று தீர்மானம் போட்டார்களாம். அதைத்தான் கேலி செய்திருக்கிறது, 'சங்கர்ஸ் வீக்லி'!

பணிக்கரைஅங்கத்தினராகக் கொண்ட அந்தக் குழு வேறு சில சிபார்சுகளையும் செய்திருக்கிறது. ஒவ்வொரு மாநிலமும் அரசாங்க உத்யோகங்களில் சரிபாதியை வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்காக ஒதுக்கிவைக்க வேண்டுமாம்!

—கோடு போடத்தான் கூப்பிட்டோம்; அவர்களோ அதை மறந்து கேடுசூழ் கருத்துக்களை நம்முன்னே நீட்டுகிறார்கள்!

அவர்கள் சிபார்சு அமுலாக்கப்பட்டால், 'தமிழகம்' என்னும் தனி மாநிலத்தில் பாதி உத்யோகங்கள் தமிழருக்கும், மீதமுள்ளவை வெளி மாகாணத்தவருக்கும் தரப்படவேண்டும். அந்தப் பாதியை மலையாளத்து மேனனும், வடநாட்டு பானர்ஜியுமல்லவா பிடுங்கிக் கொள்வார்கள்!—அது கூடாது என்பதற்காகத்தானே தட்சிணப் பிரதேசம் வேண்டாமென்றோம்!

—இப்படி அடுக்கடுக்காய் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கும் போதே, மேலும் மேலும் பசுல் அலிக் குழுவினரின் சிபார்சுகள் நம் விலாப்புறத்தைக் குத்துகின்றன.

உயர்நீதிமன்ற நீதிபதி பதவிகளில் மூன்றில் ஒரு பங்கை வெளி மாநிலத்தவருக்கே ஒதுக்கிவிட வேண்டுமாம்!

தென்னாட்டில் இந்திப் பல்கலைக்கழகம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமாம்!

—ராஜ்யங்களைப் பிரித்து புணருத்தாரணம் செய்யவேண்டியவர்கள் ஏக இந்தியத் தத்துவத்தைப் புணருத்தாரணம் செய்யக் கிளம்பிவிட்டார்கள்!

★ தொடர்ச்சி 12-ம் பக்

Manonmani News Mart,
No. 566, PYCROFTS ROAD,

அன்புள்ள குமார்,

எரிமலை ஒரு நாள் குமுறுகிறதென்றால் அதற்குப் பல நாட்கள் முன்பாகவே பூமியின் அடியிலே சக்திகள் குமுறிக் கொண்டிருக்கும் என்பதை நீ அறிவியலிலே படித்திருப்பாய்.

எவ்வளவுதான் சிரமப்பட்டு உணர்ச்சிகளை உள்ளத்தின் அடித்தளத்திலே பூட்டி வைத்திருந்த போதிலும் என்றைக்காவது ஒருநாள் அவை வெளிவந்துதான் தீரும்.



-இப்படியெல்லாம் சொல்லி தட்சிணப் பிரதேசத்துக்கு ஆதரவு தேடுகிறது இந்த ஆரிய ஏடு! ஆனால் அந்த வாசகத்தைப் பார்:

உண்மையான சுதந்திரமும் செல்வாக்கும் இருக்கவேண்டுமானால்……

–இப்போது ராஜ்ய நிர்வாகத்திலும், மாகாண சட்டசபையிலும், மாகாண மந்திரி சபையிலும் உண்மையான சுதந்தரம் கிடையாதாம்! இருப்பதெல்லாம் போலிச் செல்வாக்காம்!

நிழல் படம் நிஜப் படமாக...

இந்திய அரசியல் சட்டம் டெல்லியிலே சமைக்கப்பட்டபோது நாங்கள் நாடெங்கும் எடுத்துக் காட்டிய விமர்சனம் உனக்கு நன்றாக நினைவிருக்குமென்றே நினைக்கிறேன்.

அதிகாரத்தையெல்லாம் மத்திய அரசாங்கத்தின் கையிலே ஒப்புவித்து, ஆடுபோல் எதற்கெடுத்தாலும் தலையாட்டிக் கொண்டிருக்கும் உரிமையைமட்டும் மாகாண அரசுகள் எடுத்துக்கொண்டன.

இந்த உபகண்டத்தை மேடையாக்கினார்கள். டெல்லியின் கையிலே நூலைக் கொடுத்தார்கள். அதற்கேற்றபடி அபிநயம் பிடிக்கும் மண் பொம்மைகளாக்கினார்கள், மாகாணங்களை!

இலங்கைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஐவர் ஜென்னிங்ஸ் கூட இடித்துக் காட்டினார், சவுக்குடன் வீற்றிருக்கும் சாரதி டெல்லி; வயிறு இரைக்க ஓடும் குதிரை இதர ராஜ்யங்கள்—என்று!

அப்போது கேலி பேசினார்கள்; போலி வாதம் என்று இகழ்ந்துரைத்தார்கள்! 'அதிகாரம் யார் கையில் இருந்தாலென்ன-இதில் கூடவா பிரிவு மனப்பான்மை?' என்று சுடுமொழிகள் நம்மைத் தேடி வந்தன.

இன்றோ அவர்கள் கூடாரத்திலேயே குமுறல் ஒலி கிளம்பியிருக்கிறது.

இந்த வாரம் 'கல்கி' இதழில் 'புது ஏற்பாட்டுக் கமிட்டியின் சிபார்சுகள்' என்ற தலைப்பில் எழுதப்பட்டிருக்கும் தலையங்கத்தின் ஒரு பகுதியை கீழே தந்திருக்கிறேன், பார்:

“ஒரு ஜவகர்லால்நேருவையும், ஒரு ப்ளானிங் கமிஷனையும் எதிர்பார்த்துத்தான் எல்லாம் நடக்கிறது. ஆண்டுதோறும் செய்யவேண்டிய தீராத செலவுகளை மாற்ற வழியில்லை. மற்றப் புதுக் காரியங்களில் எல்லாம் ப்ளானிங் கமிஷன் போட்டுவரும் ஐந்தாண்டுத் திட்டமும், அதற்கு என்று 'மேலா'வில் போட்டுத்தரும் செலவுத் திட்டமுமே ராஜ்ய நிர்வாகம் போலத் தோற்றமளித்து வருகிறது. **ராஜ்ய சட்டசபைகளில் போட்டுக் காட்டும் பட்ஜெட்டுகள் வெறும் நிழற் படங்கள்தான்! எதற்கும் தில்லிக்கு விமானம் ஏறிச் சென்றுதான் விஷயங்கள் விவாதிக்கப்பட்டு முடிவாகின்றன.** பொய்யான மாரீச மான்களையும், பேய்த் தேர்களையும் விட்டுவிட்டு உண்மையை நேருக்கு நேராகப் பார்த்தோமானால், அகில இந்திய நிர்வாகம் ஒன்றுதான் இப்போது காரியாம்சத்தில் நடைபெறுகிறது…”

ஒரு நேருவினால்தான் அதிகாரத் தேர் நகர்கிறதாம்!

ராஜ்ய சட்டசபைகள் தீட்டும் பட்ஜெட்டுகள் நிழற் படங்களாம்! காகிதப்பூக்களாம்!

—உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது 'கல்கி' ஏடு!

எதற்கும் டில்லிக்கு விமானமேறிச் சென்றுதான் விஷயங்கள் **விவாதிக்கப்பட்டு** முடிவாகின்றனவாம்!

—'விவாதிக்கப்பட்டு' என்று புண்ணுக்கு புனுகு தடவுகிறது 'கல்கி'. 'விவாதிக்கப்படவில்லை; விதியென்று நம்பும்படி திணிக்கப்படுகின்றன.'—என்று சொல்கிறோம் நாம்!

காவடி எடுத்துக் காரியம் சாதிக்கின்றனர், காமராசர் குழுவினர்!

ஆஸ்திக மொழியிலே சொல்லப்போனால், பிரம்மாவின் எழுத்தைப்போலஅழித்தெழுத முடியாத வகையிலே டெல்லியிலே பட்டயங்கள் தயாராகியிருக்கின்றன.

காமராசர் நானூறு கோடி வாங்கி வருவேன்-என்று நாக்கிலே எச்சல் ஊற டில்லிமாநகரம் ஏகுகிறார். அவர்களோ எட்டி உதைப்பதைப்போல இருநூறு கோடி தந்து—இறுமாப்பையெல்லாம் உடைத்தெறிந்து சென்னைக்கு அனுப்பி விடுகிறார்கள்.

அதுமட்டுமா? அபிப்பிராயம் வெளியிடும் உரிமையைக்கூட வடநாட்டுக்காரர்கள் பிடுங்கிக் கொள்கிறார்கள். கதராடை தரித்தோர்கள் ராஜ்ய புனரமைப்புக் கமிஷனின் சிபார்சுகளைப் பற்றித் தங்களுடைய சொந்தக் கருத்துக்களை வெளியிடக் கூடாதாம். — இப்படிக் கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள், வடக்கேயுள்ள தேசியக் கூடாரத்தின் முதலாளிகள்!

தனித்து நிற்கும் வன்மையும் திண்மையும் உடலிலே இருக்கும்போது ஏன் முதுகெலும்பு இல்லாதவர்களைப் போல அடங்கி ஒடுங்கியிருக்க வேண்டும்?

ஆள் பலமும், அதைவிடச் சிறந்த மூளை பலமும் இருக்கிறது, உன்னிடம். நீ ஏன் ஆலோசனை கேட்க அடிக்கடி டெல்லி போகிறாய்?

—கல்கியின் தலையங்கத்துக்கு இப்படியெல்லாம் தெளிவுரை வழங்கமுடியும் நம்மால்!

இன்னொரு இடத்தில் 'கல்கி' எழுதுகிறது:

“இந்த நிலை சரியல்ல. ராஜ்ய நிர்வாகத்துக்கும் மாகாணச் சட்டசபைக்கும், மாகாண மந்திரி சபைக்கும் **உண்மையான சுதந்திரமும், செல்வாக்கும்** இருக்க வேண்டும் என்று கோரினோமானால், இப்போது ஆலோசனை செய்யப்பட்டுள்ள குட்டி ராஜ்யங்கள் அதற்கு உதவாது!”

— நேரடியாகவே கூறத் துணிந்துவிட்டது கல்கி!

டெல்லியின் எடுபிடிகள்தான் மாநில மந்திரிகள்! மத்திய பீடத்தின் பஞ்சாயத்து போர்டுதான் மாகாண அரசுகள்!

—நாம் இதுநாள்வரை தெளிவு படுத்தியதும்—இப்போது கல்கி கூறுவதும் இந்த உண்மையைத்தான்!

ஆனால் கல்கியோ தட்சிணப் பிரதேசம் வந்துவிட்டால் துயரெல்லாம் தீர்ந்துபோகும்—என்று தெம்மாங்குபாடுகிறது, வேட்டையாடும் காட்டை விரிவு செய்ய வேண்டுமென்று வேடன் விரும்புவதைப் போல!

நாமோ-உண்மையான சுதந்தரமும், செல்வாக்கும் பெற உரிமைக் கொடியை உயர்த்திப்பிடி! உனக்கென ஒருநாடு தேடு! கண்களைத் திற! கடமையை உணர்! தோள் தட்டு! திராவிடம் கேள்!—என்று முழக்கமிடுகிறோம்!

—நிழல் படம் நிஜப்படமாக இதுதான் நாங்கள் கூறும் மருந்து, குமார்!

அன்புள்ள,
பொன்முடி.

'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு:

ஆண்டு சந்தா	6–0–0
6–மாத சந்தா	3–8–0

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

ஆண்டு சந்தா	7–0–0
ஆறுமாத சந்தா	4–0–0

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 28—10—55 வெள்ளி

இரண்டாவது கட்டம்!

நெருப்பை நெஞ்சாகக் கொண்டிருந்தவர் ஈரத் தன்மைக்கு இலக்காகியிருக்கிறார்.

முள்ளைப் போல நெருங்க முடியாமல் இருந்தவர் மலரைப்போல் ஆகிவிட்டார்.

அதிகாரச் சகதியிலே புரண்டவர் அன்பு மயமானார்.

ஆமாம்; இந்தியாவின் பிரதமர் ஜவகர்லால் நேரு சீக்கியர் தலைவர் தாராசிங்கை டெல்லிக்கு அழைத்த, அக்டோபர் 24-ந்தேதியன்று சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேல் பேசியிருக்கிறார். அந்த உரையாடலின்போது உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் — கல்வி மந்திரி ஆசாத் ஆகியோரும் கலந்து கொண்டனராம். நேருவுடைய தனிப்பட்ட அழைப்பைத் தவிர பந்த்திடமிருந்து ஒரு கடிதமும் தாராசிங்கிற்குக் கிடைத்திருக்கிறதாம்.

—இப்படியெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு தராசிங்கோடு நேசக்கரம் நீட்டுகிறார்கள், இப்போது!

பந்த் கலந்து பேசி பிரச்னையை முடிவுகட்ட வரும்படி கடிதம் எழுதுகிறாராம். ஆனால் இதே பந்த் சென்ற ஜூன் மாதம் இந்நேரம் தாராசிங் தலைமை ஏற்று நடத்திய அகாலி தளத்தவரின் உரிமைக் கிளர்ச்சியின்போது, ஐயாயிரவரை சிறைச் சாலையிலே பூட்டிவிட்டு, 'இன்னும் எத்தனை நாளைக்கு இந்தப் போராட்டம் நடக்கப் போகிறது?'—என்று கொக்கரித்து நின்றார்.

அமிர்தசரஸ் பொற்கோயிலின் முன்பாக புன்முறுவல் பூத்த முகத்துடன் புலிநிகர் வீரர்கள் காராக்கிரகத்துக்குள் காலடி வைத்தார்கள்.

மொழிவழி மாகாணப் பிரிவினைக்காக அன்று உரிமைக் கொடியை உயர்த்திப் பிடித்தபோது அடக்குமுறைக் கரம் நீட்டி, கழுத்தை நெறிக்க முயன்றார்கள், இன்று கடிதம் எழுதும் கனம்கள்!

மாஸ்கோவிலிருந்து மீண்ட மோதிலால் மைந்தர் திரும்பி வந்தவுடனேயே பாஞ்சாலத்து மக்கள்மீது பாணம் பாய்ச்சத் துவங்கி விட்டார்.

> "உங்கள் கிளர்ச்சி குறுகிய மனப்பான்மை கொண்டது; முட்டாள்தனமானது; ஞான சூன்யமானது"

—என்று சொற்களால் சூடுபோட்டார் பாண்டுங் பண்டிதர்!

இன்றோ அந்தக் கிளர்ச்சிக்காரரை அழைத்து இரண்டு மணி நேரம் பேசியிருக்கிறார்!

பஞ்சாபி மொழி பேசுவோருக்குத் தனி மாகாணம் தேவையில்லை என்று புது மாநிலக் குழு அறிவித்தவுடன், தங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் விரைவில் வரிகொடா இயக்கத்தைத் துவங்குவோம்—என்று முழக்கமிட்டது சீக்கிய சிங்கம் தாராசிங். அந்த இடிக்குரல்தான் டெல்லியிலே உள்ள அதிகார வர்க்கத்தின் காதுகளைத் துளைத்திருக்கிறது. அதற்குப் பிறகுதான் இந்த அழைப்பும், அரவணைப்பும் நடந்தேறியிருக்கின்றன!

குறுகிய மனப்பான்மை கொண்டது—என்று ஜூன் மாதத்தில் குறிப்பிட்டார். அக்டோபரிலோ அவர்களை அழைத்துப் பேசுகிறார்.

முட்டாள்தனமானது—என்று அக்னியைக் கொட்டினார். இன்று அவர்களைத்தான் ஆரத் தழுவத் துடிக்கிறார்!

ஞான சூன்யமானது—என பிலாக்கணம் படித்தார். இன்றோ அவருக்குப் புளகாங்கிதம், தன்னுடைய அழைப்பு பலன் அளித்து விட்டதே என்று!

அதிகார வர்க்கத்தின் இந்த மனமாச்சரியத்தைக் குறித்துத்தான், அன்று ஆயிரக் கணக்கானோர் அமிர்தசரஸ் நகரிலே கைதானபோது 10-6-55-ல் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தோம்.

> "புல்கானினைச் சந்திக்கப் பயணம் நடத்தியிருக்கும் பண்டிதர், தாராசிங்கைப் பார்த்து சாந்தி காணும் நிலைமையைப் பேசி இருக்கக் கூடாதா?
>
> மாஸ்கோவுக்குப் பறந்தவர் அமிர்தசரஸ் சென்றிருந்தாரேயானால், எண்ணற்ற இளைஞர்களின் சிறை வாழ்வு தடுக்கப்பட்டிருக்குமே!
>
> ரஷ்யாவுக்குக் கூடைகூடையாக மாம்பழம் அனுப்பியவர் பஞ்சாபை நோக்கி ஒரு அபயக்குரல் கொடுத்திருந்தால் போதுமே—நேரு மக்களின் நண்பர்; குடியாட்சியின் காவலன் என்பதை உலகு ஒப்புக்கொண்டிருக்குமே!"

—அதன்படியே பூட்டிவைத்து மகிழ்ந்தவர்கள் தான் இன்று கூட்டிவைத்துப் பேசுகிறார்கள்!

ஏன் இந்த நிலைமை?

மாற்றுக் கட்சிக்காரர்களோடு மக்களுக்குள்ள குறைபற்றி ஆராய்வது அவமானம் என்று கருதிய அதிகாரத் திமிர்மிக்கோர் ஏன் இப்படித் திடீரென்று தலை கவிழ்ந்தனர்?

காரணம் இருக்கிறது!

தாராசிங் தன்னுடைய கோரிக்கைப்படி பஞ்சாபியர்களுக்கென தனி மாநிலம் அமைக்காவிட்டால், வரிகொடா இயக்கம் துவங்குவேன்—என்று அறிவித்தார். உடன், ஆட்டம் கொடுத்துவிட்டது வடநாட்டு ஏகாதிபத்யம்!

நேரு போன்ற தலைவர்கள் தாராசிங்குடன் நேசக்கரம் நீட்டுவதை நாம் சாதாரண அரசியல் நிகழ்ச்சியாகக் கருதக்கூடாது. ஈசலைப் போல இளைஞர் பட்டாளம் சிறை சென்றாலும் நான் அசையேன்-என்று சொல்லிக் கொண்டிருந்த அரசாங்கம், இன்று அசைகிறதென்றால், அதிலே பெரியதொரு அரசியல் மாற்றம் புகுந்து கொண்டிருக்கிறதென்றுதான் பொருள் கொள்ள முடியும்!

சுருக்கமாகச் சொல்லப் போனால் டெல்லி ஏகாதிபத்ய அமைப்பிலே கீறல் விழுந்து விட்டது. பலமான புயலொன்றைத் தாங்குகிற அளவுக்கு அதனிடம் சக்தியில்லை.

உதாரணம் சொல்ல வேண்டுமானால், 'ஜாலியன் வாலாபாக்குகள்' நடத்தி வெறித்தாண்டவம் நிகழ்த்திய ஆங்கில ஆதிபத்யம், பிறகு வட்டமேஜை மாநாட்டிற்கு காந்தியாரை அழைத்த கதையை நினைவுறுத்துவதைப் போல, மூன்று மாதங்களுக்கு முன்பு கண்ணீர் குண்டுகளை வீசி, தடியடிப் பிரயோகம் செய்து, 'வெலிங்டன் தர்பார்' நடத்தியவர்கள் இப்போது பாக்கு வைத்து அழைக்கிற அளவிற்கு வந்திருக்கிறார்கள்.

தாராசிங்குடைய அமைப்பைவிட வலுவிலும் பொலிவிலும் நம்முடைய இயக்கம் தாழ்ந்ததல்ல. அவருடைய அமிர்தசரஸ் போராட்டத்தைவிடப் பெரிய மும்முனைப் போராட்டத்தையே நடத்திக் காட்டி விடுதலைக் கிளர்ச்சிகளின் வரலாற்றில் முக்கியமானதோர் இடத்தைப் பிடித்திருக்கிறோம்.

தாராசிங்கிடம் இன்று டெல்லி தலை குனிகிறது. காரணம் வடநாட்டு ஏகாதிபத்யம் 'ஜாலியன் வாலாபாக்' படுகொலைகளை நிறுத்திக் கொண்டு வட்டமேஜை மாநாடு கூட்டுகிற அளவுக்கு தன்னுடைய வெறி சக்திகளை அடக்கிக் கொண்டிருக்கிறது. **வட்டமேஜை மாநாடுகள், ஏகாதிபத்யம் விடுதலைப் படையினரிடம் கையாளும் விதவிதமான முறைகளில் இரண்டாவது கட்டம்!**

நம்மைப் பொறுத்தவரையில் வடநாட்டு ஆதிபத்யம் 'ஜாலியன் வாலாபாக்' காண்டத்தைத் தான் படித்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே முக்கியமான அந்த அடுத்த கட்டமும் வரலாம்! அப்போது அறிவகத்திற்கு டெல்லியிலிருந்து கடிதம் வந்தால்கூட நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை; ஏனெனில் தாராசிங்கைவிட வலிமை கொண்டவர்களாயிற்றே, நாம்!

தென் பகுதி இரயில்வேமென்ஸ் யூனியன் உறுப்பினர்களுக்கு

அறிவிப்பு.

எஸ். ஆர். எம். யூ. தலைவரான சீ. இராகவானந்தம் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்:—

''சென்னை 19-10-55 (வெளியூர் 20-10-55) 'விடுதலை இதழில், என் மீது நம்பிக்கை இல்லை என்றும், என் தலைமையில் எஸ். ஆர். எம். யூ—வின் எந்த விதமான கூட்டமும் கூட்டுவது நன்மை பயக்காது என்றும், மத்திய சங்க நிர்வாகிகள் அறுவர் பெயரில் வெளிவந்துள்ள அறிக்கை என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது என் தலைமையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, அது நிறைவேறினால் என்னை விலக்கவும், நிறைவேறாவிட்டால் என் தலைமையின் கீழ் பணியாற்றவும் வேண்டியதே முறை. அறிக்கை விடுத்த தோழர்கள், மேற்கண்ட முறையைக் கையாளும்படி பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். ''கூட்டுப் பொதுச் செயலாளர் திரு. ஏ. கே. சச்சிதானந்தமும், பொன்மலை, திருச்சி கிளைகளும் யூனியன் சட்ட திட்டத்திற்கு மாறாக நடப்பதால் தான், பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும், 'தொழில் முரசு' ஆசிரியர் பதவியிலிருந்தும் விலகிக் கொள்ளுவதாக தோழர் வ. வீராசாமி எம். பி. அவர்கள் எனக்குக் கடிதமெழுதியுள்ளார்கள்.

''அக்கடிதம், 17-10-55-ல் எழுதப்பட்டு, 18-10-55-ல் எனக்குக் கிடைத்தது. அக் கடிதத்தில் என்னைப் பற்றி என்ன எழுதியிருக்கிறார்கள்—கூட்டுப் பொதுச் செயலாளரைப் பற்றியும், அவர் தம் ஆதரவாளரைப் பற்றியும் என்ன எழுதியிருக்கிறார்கள்—என்பது, நிர்வாகக் குழுக் கூட்டத்தில் அக் கடிதம் வாசிக்கப்படும் பொழுது விளங்கும்.

''6—11—55-ல், விசேட நிர்வாகக் குழுக் கூட்டம் விழுப்புரத்தில் கூட்டுகிறேன். அதுவரையில் உறுப்பினர்கள் பொறுமையுடன் இருக்கும்படி பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

''இந்த அறிக்கையின் பிரதி ஒன்று 'விடுதலை' இதழுக்கு அனுப்பப்பட்டுள்ளது''

* * *

வேலூர் முள்ளிப்பாளையம் தியேட்டரில்
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்
நாடக மன்றத்தினரின் தினசரி நாடக நிகழ்ச்சி.
28--10--55 வெள்ளி முதல்,

புது வெள்ளம்

என்ற சமுக சீர்திருத்த நாடகம் நடைபெறும்.

கட்டணம்:
ரூ. 2-8-0, 1-8-0, 0-12-0, அணா 6
பெண்கள்: தரை அணா 4.

குறிப்பு: பிரதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6-30 மணிக்கு நடைபெறும். திங்கள்தோறும் விடுமுறை.

பந்த நல்லூர்

29-10-55 சனி மாலை 6 மணிக்கு, கடை வீதியில், முத்தமிழ் நாடக மன்ற சார்பில், தோழர் என். அசோகன் அவர்கள் தலைமையில், தோழர்கள் என். வி. நடராசன், என். கிட்டப்பா, ம. கோ. மணி—ஆகியோர் பேசுவர்.

மாயூரம்

30—10—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு, கூறைநாடு கடை வீதியில், நெல்லிக்குப்பம் மஜீத் மன்றத் துவக்க விழாவில், தோழர் ரா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தலைமையில், தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், என். வி நடராசன்—ஆகியோர் பேசுவர்.

கும்பகோணம்

30—10—55 ஞாயிறு காலை 9—மணிக்கு, மீனாட்சி தியேட்டரில், இளைஞர் தமிழ் மன்ற கட்டிட நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும். தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில், 'மாணவர் எழுச்சி' பற்றி தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும், 'பொருளாதார சீர்திருத்தம்' என்பது பற்றி தோழர் என். வி. நடராசன் அவர்களும், 'சமுதாய சீர்திருத்தம்' என்பது குறித்து அறிஞர் அண்ணா அவர்களும் பேசுவார்கள். (கட்டணம்: அணா 8, 4.)

அன்று மாலை 4 மணிக்கு, போர்டர் டவுன் ஹாலில், குடந்தை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில், மாணவத் தோழர் டி. மதியழகன் தலைமையில், அறிஞர் அண்ணா அவர்கள் ஆங்கிலத்தில் பேசுவார்கள்.

அன்று மாலை 6 மணிக்கு, குடந்தை அரண்மனைத் தோட்டத்தில், தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில், அறிஞர் அண்ணா அவர்கள் ''இன்றைய அரசியல் நிலை'' என்பது பற்றிப் பேசுவார்கள்.

மேலூர்

30—10—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு, முனியாண்டி கோயில் திடலில் நடைபெறும் கூட்டத்தில் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் பேசுவார்கள்.

மேலப்புதூர் (திருச்சி)

30—10—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு, தி. மு. கழகப் படிப்பகத்தின் முன்பு, தோழர் ச. செல்வராசன் அவர்கள் தலைமையில், தோழர்கள சி.பி. சிற்றரசு, எம். எஸ். மணி, நெடுமாறன்—ஆகியோர் பேசுவர்.

வெள்ளலூர் (கோவை)

31-10-55 திங்கள் மாலை 6-30 மணிக்கு, கவுண்டம்மன் கோவில் மைதானத்தில், தோழர் வெள்ளிங்கிரி அவர்கள் தலைமையில், தோழர்கள் கோவை செழியன், சி. டி. தண்டபாணி — ஆகியோர் பேசுவர்.

இலங்கை அன்பர்களுக்கு

இலங்கைத் தீவுக்கு 'நம் நாடு' இதழ் விற்பனையாளராக கீழ்க் காணும் தோழர் நியமிக்கப்பட்டு, பிரதிகள் நாள் தோறும் விமானத்தின் மூலம் அனுப்பப்படுகின்றன. ஈழத்து அன்பர்கள் அனைவரும் அவரிடம் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

தோழர் வி. **எஸ். முருகன்,**
82-13, குமாரத் தெரு,
கொழும்பு-**11**.

கீழ்வழித்துணையாங்குப்பம்

(வ.-ஆ. மாவட்டம்)

1—11—55 செவ்வாய் மாலை 5—மணிக்கு, சந்தைவெளியில், கோ. வீரவசந்தலு அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் கோவேந்தன், வே. அ. இளஞ்செழியன்—ஆகியோர் பேசுவர்.

சென்னை (சேத்துப்பட்டு)

1—11—55 செவ்வாய் மாலை 6—மணிக்கு, வ. உ. சி. இளைஞர் மன்றத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு விழா, சேத்துப்பட்டு வைத்திநாத முதலி தெருவில் நடைபெறும். தோழர் மு. கோ. இராசன் அவர்கள் தலைமையில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, வழக்கறிஞர் கோகுலகிருட்டிணன், முகவை பாண்டியன்—ஆகியோர் பேசுவர்.

ஆற்காடு

2—11—55 புதன் மாலை 6—மணிக்கு, பெரியார் மைதானத்தில், தோழர் ஆ. ஆர் இராசதுரை அவர்கள் தலைமையில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, ஏ. கே. வில்வம் — ஆகியோர் பேசுவர்.

மதுராந்தகம் (நாடகம்)

5—11—55 சனி இரவு, மதுராந்தகம் தி. மு. கழக கட்டிட நிதிக்காக, பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினரின் ''இன்பக் கனவு'' நாடகம் நடைபெறும். அப்போது மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 200 கொடுக்கப்படும்.

சென்னை

6—11—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு, திரு. வி. க. திடலில் (கான்ரான்ஸ்மித் நகர்) பக்கிங்காம், கர்னாட்டிக் மில் தொழிலாளர்களின் மாநில மாநாட்டு நிதியளிப்பு பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் டி. எஸ். சண்முகம் அவர்கள் தலைமையில், அறிஞர் அண்ணா அவர்கள் பேசுவார்கள்.

தயாராகிறது!
'' மதி ஒளி ''
[சிறப்பிதழ்]
★ அழகிய அமைப்பு!
★★ அத்தனையும் சுவை தரும் நல்விருந்து!!
விலை 4 அணா.
ஏஜண்டுகள் தேவை
தேவையான பிரதிகளுக்கு விண்ணப்பிக்கவும்:
''மதி ஒளி'' சென்னை-1



புல்கானின் பார்வைக்கு

(3) பஞ்சைகள் சீலம் !

விமான நிலையம்; விருந்து மண்டபம்; கேளிக்கைக் கூடம் —இவைகளோடு புல்கானின் விஜயம் முடிந்துவிடக்கூடாது.

பூமணம் நுகர்வதிலும், நேருவின் பாமணம் கேட்டு ரசிப்பதிலும் ரஷ்ய அமைச்சரது நேரமும், நோக்கமும் செலவிடப்படுமேயானல், வெண்மையான கதருக்கடியிலே நெளிந்து கொண்டிருக்கும் புன்மைப் புழுக்களை அவரால் பார்க்க முடியாது!

மோதிலால் மைந்தரை மாஸ்கோ விமானக் கூடத்திலே புல்கானின் வரவேற்ருர்; குருஷேவ் கைலாகு கொடுத்தார்; இராணுவம் மரியாதை செலுத்தியது; வழியெங்கும் சிரிப்பு தவழும் வதனங்கள்-செந்தாமரைமுகங்கள்-கைகளை ஆட்டி, கண்களை அகட்டி அலகாபாத் வீரருக்கு ஆரத்தி எடுத்தார்கள்!

புல்கானினுக்கு இங்கும் அப்படிப்பட்ட வரவேற்பா கிடைக்கும்?

செங்கொடி காட்டி சிறியெழுவர், மக்கள்! பூவிதழ் தூவ-புன்முறுவல் காட்ட—இளஞ்சிட்டுகள் வரலாம்!

ஆனல் பாலுக்கு ஏங்கி அழும் பாலகர்கள் தூவிய பூக்களிலே பன்னீரின் மணம் இருக்க முடியாதே! அரைப்பட்டினிகள் முறுவலித்தால் அங்கே பசியின் ரேகைகளல்லவா தலைகாட்டிக் கொண்டிருக்கும்!



குதிரைக்கு ஒரு லாயம்! நாய்க்கு ஒரு ஓய்விடம்! ஆனல் பஞ்சசீலம் பிறந்த இந்த மண்ணிலே மனிதன் வாழ்வதற்குத்தான் ஒரு குடிசை இல்லை!

மாஸ்கோவிலே பாதாள ரயில் பாதையிருக்கிறதாம். இங்கோ நகரத்துக்கு நகரம் பாதாள உலகமல்லவா இருக்கிறது!

அந்தப் பாதாள உலகம்—புல்கானின் போன்ற பெரிய மனிதர்கள் வரும்போது பூட்டப்பட்டு விடுகிறது-

சென்னை நகரத்திலே மட்டும் நடைபாதையிலே பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் வாழ்கின்ருர்கள்!

நான்கடி அகலத்திலே பூனையைப் போல சுருட்டிப் படுத்துக்கொண்டு பாரத நாட்டின் பிரஜைகளாய் வாழ்க்கை நடத்துகிருர்கள்!

இந்த நாட்டிலே கல்லால் அடித்த பிள்ளையாருக்குக் கூட பாதுகாப்பான இடம் இருக்கிறது; ஆனல் உயிர் உள்ள மக்களோ பாதை ஓரத்திலே வாழ்ந்து மடிகிருர்கள் !

சமையல் அங்கே! சாப்பாடு அங்கே! சந்ததி விருத்தியும் அங்குதான்!

புல்கானின் வரும்போது இந்தப் 'பாதாள லோகம்' காலி செய்யப்பட்டு விடலாம்! 'பஞ்சசீலம் பிறந்த நாட்டில் நடந்த காட்சிகளைப் பார்த்தீரா? பிச்சைக்காரர்கள் கிடையாதே! பரட்டைத் தலையர்களை தேடியல்லவா பிடிக்க வேண்டும்?'-என்று பண்டிதர் புராணம் படிக்கலாம்!

எந்த நடைபாதையிலே நரைத்த தலையினரும், நடைபயிலும் குழந்தைகளும் நின்றுகொண்டு மாஸ்கோவிலே மலர் மாரி பொழிந்தார்களோ, அதே நடைபாதையிலே இங்கு நாதியற்றவர்கள் வாசம் புரிகிருர்கள்! நடைப் பிணங்களாய் வாழ்க்கை நடத்துகிருர்கள்!

மோதிலால் மைந்தர் நெஞ்சு துணுக்குறும் இந்தக் காட்சிகளையெல்லாம் மாற்றியமைக்கிற அளவுக்குத் தன்னுடைய ஆட்சி முறையை அமைத்துவிட்டு, 'பஞ்சசீலக் கொள்கை' வகுத்தாரேயானல் நாமும் பரவசப் பட்டிருப்போம்.

ஏக்கம் குடிகொண்ட கண்களோடு ஏழை திரிகிருன். அவன் குந்துவதற்குக் குடிசையில்லை!

பிள்ளை விற்கிருன்! கொள்ளை நோயால் சாகிருன்!

—இவர்களின் வாழ்க்கை உயர்வதற்கான வசதிகளைப் பெருக்காமல் ஒவ்வொரு நாடாக உல்லாசப் பயணம் நடத்தினல் யாருக்கென்ன லாபம் இருக்கிறது?

ரஷ்யாவிலே பசி இல்லை—என்கிற நிலை பிறந்துவிட்டபோது புல்கானின் இந்தியாவுக்குப் புறப்பட்டிருக்கிருர்.

சொந்த நாட்டிலே அழுகுரல் கேட்காதபோது அயல் நாட்டினர் குவிக்கும் ஆனந்தக்களிப்பை ஏற்றுக்கொள்ளும் நிலையிலே இருக்கிருர் அந்த ஏறு நடைக்காரர்!

வீட்டுக்கொல்லையிலே இருக்கும் சாக்கடையைத் தூர்த்த பிறகல்லவா ஊரின் சுகாதாரத்தைப் பற்றி உபதேசம் செய்ய வேண்டும்!

உள் நாட்டிலே உருக்குலைந்தோர் தொகை ஏராளமாகப் பெருகி நிற்கிறது. பசியால் துடிக்கும் பாமரர் — தொழில் கிடைக்காமல் தொல்லைப்படும் தொழிலாளி—பிச்சை எடுத்தே திரேகம் வளர்க்கும் பரட்டைத் தலையர்கள்—இவர்களின் எண்ணிக்கையை ஓரளவுக்கு குறைத்துவிட்டு அல்லவா, இவர் உலக சமாதானம் பேச வேண்டும்? செய்தாரா இவர்?



இப்படிச் சாமான்களை அடுக்கி வைத்துவிட்டு, இருக்கின்ற பொருளையும் பூனைக்கும், நாய்க்கும் பலிகொடுப்பவர்கள் சென்னை நகரிலே மட்டும் பத்தாயிரத்துக்குமேல் இருக்கிருர்கள்!

பஞ்சசீலக் கொள்கை போர் வெறி அகற்றி சமாதான நோய் ஒழிக்கும் சஞ்சீவியாக இருக்கலாம். ஆனல் நாட்டிலேஉள்ள 'பஞ்சைகள் சீலம்' ஒழிக்கப்படாதவரை நாம் எப்படி அகில உலகம் பரவி நிற்கும் பஞ்சசீலத்தைப் போற்ற முடியும்?

உணவு இல்லை என்கிருன் ஒருவன்; தனக்கு உல்லாசப் பொழுதுபோக்கு இல்லையே என வருந்துகிருன் இன்னொருவன்.

○ தொடர்ச்சி 10-ம் பக்கம்

புதையல்

மு. கருணாநிதி

இதுவரையில்...

கர்ண பரம்பரைக் கதைகள் பலவற்றை கிளப்பிக்கொண்டு— உழைக்காமல் பொருள் சேர்க்க எண்ணிய பல்லோரது ஆவலையும் தூண்டிக் கொண்டு— மருங்கப்பள்ளம் சிவன் கோவிலுக்குப் பக்கத்தில், எங்கேயோ ஓரிடத்தில் பொற்குவியல்கள் புதைந்து கிடப்பதாக வதந்தி/ அந்தப் புதையலை தானே அடையப் பாடுபடுகிறார், மருங்கப்பள்ளத்தில் பெரிய புள்ளியும் பேராசைக்காரருமான வெள்ளியம்பலம். அந்த முயற்சியில் ஒரு கட்டமாக—ஒரு நாள் இரவு சோதிடர் குறிப்பிட்டுத் தந்த நேரத்தில். பூமியைத் தோண்டிப் பார்க்கச்செல்கிறார். அந்த நேரத்தில், கோயிலுக்குப் பின்புறத்தில் ரகசியமாக சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கின்றனர், துரை—பரிமளா காதல் ஜோடி. பேச்சினிடையே 'அதோ, அந்த மாமரத்தடிதான் தங்கத்தை புதைத்த இடம்' என்கிறான் துரை. அதைக் கேட்ட வெள்ளியம்பலம் ஆவலுடன் ஓட, காதலர்கள் பயந்து கடற்கரை ஓரத்திலே வானளாவி நிற்கும் மனோரா பக்கம் ஓடுகிறார்கள். ஓடும்போது துரை விட்டுச் சென்ற ஒரு செருப்பையும், பரிமளாவின் மேலங்கியையும் வெள்ளியம்பலம் எடுத்துச் செல்கிறார்.

மனோராவை அடைந்த காதலர்கள், மாயாண்டிக் கிழவர் செய்யும் பிரார்த்தனையைக் கேட்கிறார்கள். கள்ளத் தோணியில் தான் இலங்கை செல்வதற்கு அவர்கள் தடையாக இருந்துவிடுவார்களோ என்று பயந்து, அவர்களைத் தாக்குகிறார் மாயாண்டி. பின் தன் செயலுக்கு வருந்தி கள்ளத்தோணியில் புறப்பட்டுவிடுகிறார். அவருடைய மடியில் புதையலைக் கண்டு பிடிக்க உதவும் செப்பேடும் சிறு கல்லும் இருக்கின்றன.

பரிமளா விடியற்காலையில் வீடு திரும்புகிறாள். இரவு நிகழ்ச்சியை மறைத்து, தன்னை மோகினிப் பிசாசு தூக்கிச் சென்றதாக பொய் சொல்லுகிறாள். தாய் அஞ்சலை நம்பிவிடுகிறாள். முன் கோபக்கார தந்தை தாண்டவன் நம்பவில்லை. மகளைக் கோபிக்கிறார். அந்தக் குரல் தெருவிலே சென்றுகொண்டிருந்த வெள்ளியம்பலத்தை வீட்டிற்குள் இழுத்து வருகிறது. அவரது யோசனையின் பேரில், மோகினிப் பிசாசு தூக்கிச் சென்றதாக பரிமளா குறிப்பிட்ட இடத்திற்கு அவரும் தாண்டவனும் புறப்படுகிறார்கள். அடையாளம் சரிதான். ஆனால் அங்கே தனியாகக் கிடந்த செருப்பு ஒன்று வெள்ளியம்பலத்தின் மூளையைக் குழப்புகிறது. முதல் நாள் இரவு தான் விரட்டிய காதல் ஜோடி—பரிமளாவும், அவள் காதலனுமாகத்தான் இருக்கவேண்டும் என்று முடிவு கட்டுகிறார். புதையல் ரகசியம் அறியத் துடிக்கிறார். துடிப்பின் எல்லையில் பயங்கர முடிவென்றும் செய்கிறார்.

இரவு வந்தது. பரிமளாவின் நடத்தையிலே மாசு கண்ட தாண்டவன், அவளைக் கொன்றுவிடுவது என்ற முடிவுடன், அவளது அறைக்குப் போகிறார். ஆனால், பரிமளாவோ வெள்ளியம்பலத்தின் ஆட்களால் தூக்கிச் செல்லப்படுகிறாள்!

அதே சமயத்தில்...

நடுக் கடலில் சென்றுகொண்டிருந்த கள்ளத் தோணியில், புதையல் ஆசைபிடித்த ஐயப்பன் என்ற முரடன், மாயாண்டியிடமிருந்து செப்பேட்டையும் சிறு கல்லையும் பலாத்காரமாக பறிக்க முயற்சிக்கிறான். அப்போது போலீஸ் உடையில் சென்ற துரை, கள்ளத் தோணியை வழி மறித்து அவர்களைக் கைது செய்து கரைக்குக் கொண்டு வருகிறான்.

கட்டுண்ட பரிமளா மனோராவில் வெள்ளியம்பலத்தின் முன்னே நிறுத்தப்படுகிறாள். அவளது காதலன் யாரெனக் கேட்க, பரிமளாவும் சொல்லுகிறாள். தன் காதல் பாதையிலே கை கோர்த்துவரும் உண்மைக் காதலன் துரையின் பெயரை அல்ல; பள்ளிப் பாதையில் இடையூறுகள் பல செய்து வந்த பட்டுக்கோட்டை துக்காராமைச் சொல்லுகிறாள். அப்போது கரையில், போலீஸ் உடையில் துரையின் குழுவினர் தென்படவே அம்பலமும் ஆட்களும் பயந்து ஓடுகிறார்கள். துரை பரிமளாவைக் காண்கிறான்.

உடனே, துரை ஐயப்பன் கூட்டத்தினரை விரட்டிவிட்டு, பரிமளா — மாயாண்டி — இருவருடனும் புதப்பட்டினத்திலிருந்த தன் இல்லம் செல்கிறான்.

இதற்கிடையில், 'பரிமளாவின் காதலன்தான் துக்காராம்; அவனுக்குத் தெரியும் புதையல் ரகசியம்' என்று தவறாக முடிவு செய்த வெள்ளியம்பலம், பட்டுக்கோட்டை சென்று, துக்காராமை மருங்கப்பள்ளம் அழைத்துவந்து, வாய்க்கால் கரை பங்களாவில் தங்க வைக்கிறார். பரிமளாவைத் தானே அடையவேண்டும் என்ற துக்காராமின் மனக்கோட்டை அவரது முயற்சிக்கு ஊக்கம் தருகிறது. ஆகவே தனது வேலைக்கார ராமனை துக்காராமின் தூதுவனைப்போல் பரிமளாவிடம் அனுப்புவதாக நாடகம் நடிக்கிறார். ராமனும் தூது போகிறான். ராமன் திரும்பி வந்து, தான் பரிமளாவைச் சந்தித்ததாகவும், அன்று இரவு மருங்கப் பள்ளம் சிவன் கோவிலுக்கருகில் துக்காராமை அவள் சந்திக்க வரச்சொன்னதாகவும் சொல்லுகிறான். இவை எல்லாம் அம்பலத்தின் சதித்திட்டம் என்பதை உணராத பரிதாபத்திற்குரிய துக்காராம், அன்று இரவு வந்ததும் சிவன் கோயிலை நோக்கித் தன்னந்தனியாக நடக்கிறான்.

வாசக நண்பர்களுக்கு!

★★★ 'புதையல்' தொடர் கதையை புதிதாகப் படிப்போர் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் அல்ல என்று காண்பிப்பதைப் போல முன் கதை வேண்டும் என்று ஏராளமான வாசகர்கள் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். அவர்களுடைய வேண்டுகோளைப்புறக்கணிக்க முடியாத நிலையில்—பழைய வாசகர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த இதழில் நடந்த கதையை வெளியிட்டிருக்கிறோம். அடுத்த இதழ் முதல் புதிய நண்பர்களோடு புதையல் கதையின் அடுத்த கட்டத்தை நீங்கள் நுகரலாம்.

—(ஆ-ர்)

அந்த சமயத்தில் புதப்பட்டினத்தில் துரையின் வீட்டிலே பரிமளாவுக்கு எதிரில், துரை தன் கதையைச் சொல்லுகிறுன். அப்போது கையில் கத்தியுடன் கொல்லைப்புற ஜன்னலருகில் ஒளிந்து நிற்கிறது ஒரு கரிய உருவம்.

தமிழகத்திலே பிறந்து, ஆனால் பிழைப்பதற்கு இலங்கை சென்றது துரையின் குடும்பம். தந்தை குமார வடிவுக்கும் தாய் வள்ளியம்மைக்கும் பிறந்தவர்கள் துரையும், அவனது தங்கை தங்கமும்: துரையின் தாய் வள்ளியம்மையின் மேல் தோட்ட முதலாளி டாக் துரை என்பானுக்கு ஒரு கண் உண்டு. அந்தக் 'காமப்பிசாசு'க்கு உதவி செய்யக் காத்திருந்தான் காளிமுத்து என்ற கங்காணி. அந்தத் துரைமகனுக்கு மேரி என்ற மகளுண்டு; அவள் மேனு மினிக்கி! தன் காதலன் ஜோசப் இந்தியாவுக்குச் சென்றவுடன், அவள் குமாரவடிவின் மீது வலை வீசுகிறுள். ஒரு நாள் அவள் பலவந்தமாக அவரைக் கட்டிப் பிடித்ததை மனைவி வள்ளி பார்த்து விடுகிறுள். அன்றே கணவன்—மனைவி உறவில் முறிவு ஏற்படுகிறது.

இந்நிலையில் ஒரு நாள் டாக் துரையும் காளிமுத்துவும் வள்ளியம்மையை பலாத்காரம் செய்ய முயற்சிக்கிருர்கள். அவள் கத்தி எடுத்து கற்பைக் காக்க முனைகிறுள். ஆனல் அதே கத்தி முரடர்கள் கையில் சிக்க, வள்ளியம்மை கொலை செய்யப்படுகிறுள். ஆனல் கொலைகாரன் என்ற குற்றம் குமாரவடிவின் மேல் சுமத்தப்படுகிறது. அதற்கு உதவுகிறது, குமார வடிவு தன் டைரியில் எழுதியிருந்த 'முதல் தேதி வள்ளி வெட்டப்படவேண்டும்' என்ற சொற்கள்! அந்தச் சொற்கள் வள்ளியைக் குறிப்பிடவில்லை; தோட்டத்திலே பயிரிடப்பட்டிருந்த வள்ளிக்கிழங்கைத்தான்! ஆனல் சட்டமோ குமார வடிவை 'ஆயுள் தண்டனை' கைதியாக்கி விடுகிறது; சிறைக்குள் தள்ளுகிறது.

பாட்டியும் இறக்கவே, அனுதைகளான துரையையும் தங்கத்தையும் ஒரு சாமியார் இந்தியாவுக்கு அழைத்து வருகிருர். அந்த வஞ்சகச் சாமியாரும் புதையல் வெறி கொண்டவன்! ஆகவே அவன் புதையல் எடுக்க தங்கத்தைத் தந்திரமாக பலிகொடுத்து பூமியில் புதைத்தும் விடுகிறுன். அவனும் பாழுங் கிணற்றில் விழுந்து இறக்கிறுன்.

தங்கத் தங்கையையும் இழந்த துரை தாயகத்திலே தனிமனிதனுக உலவினுன். அப்போதுதான் எட்டு வயதுச் சிறுமி பரிமளாவைச் சந்தித்தான். அந்தச் சிறுமியின் பெரிய உள்ளத்திலே அந்தப் பிச்சைக் காரனுக்குத் தனி இடம் கிடைத்து விட்டது. தன் நிலைமை உயர்த்திக் கொள்ள துரை ஒரு நாடகக் கம்பெனியில்சேர்ந்து நாடு சுற்றினுன். எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் பரிமளாவைச் சந்தித்தான். பிச்சைக்காரனுக அல்ல; உயிர் காதலனுக!—இப்படி துரை தன் கதையைச் சொன்னதும் மாயாண்டி அழுகிருர். மாயாண்டி தனது தந்தை குமார வடிவுதானே என்று சந்தேகிக்கிறுன் துரை. ஆனல் மாயாண்டியோ மர்ம மனிதனுக பேசுகிருர். தான் குமார வடிவின் நண்பன் என்று சொல்லி, குமாரவடிவின் கதையைச் சொல்லுகிருர்:

''துரை! குறித்த காலத்திற்கு முன்பே சிறையிலிருந்து விடுதலையான குமாரவடிவு தமிழ் நாடு வந்தான். பிழைக்க புதுவழி கண்டான். கோயில் விக்ரகங்களுக்கு அடியிலே புதைக்கப்பட்டுக் கிடக்கும் தங்கம், வெள்ளி நாணயங்களைத் திருடிப் பிழைத்தான். இந்நிலையில் ஒருநாள் இரவு, மருங்கப் பள்ளம் சிவன் கோயிலில் திருட முயற்சித்தபோது, புதையல் ரகசியம் சொல்லும் செப்பேடும் சிறு கல்லும் அவன் கையில் கிடைத்தன. ஆனல் அதே சமயம் அவனைப் பாம்பு கடித்து விட்டது. சாகுமுன் செப்பேட்டையும் சிறு கல்லையும் என்னிடம் தந்தான். இந்தா துரை, அவைகளை—உன் தந்தையின் பொருளை—நீயே எடுத்துக்கொள்'' என்று சொல்லிக் கொண்டே மாயாண்டி, தன் மடியிலிருந்து செப்பேட்டையும் சிறு கல்லையும் எடுத்து துரையிடம் நீட்டுகிருர். அப்போது கையில் கத்தியுடன் கொல்லையில் மறைந்திருந்த ஐயப்பன் பாய்கிறுன். உயிரையும், புதையல் ரகசியத்தையும் காத்துக்கொள்ள அவனுடன் போரிடுகிருர்கள் துரையும் கிழவரும்.

மிருகத்திற்கீடான ஐயப்பனுல் தன் காதலனுக்கு தீங்கு ஏற்பட்டு விடுமோ என்று பயந்த பரிமளா, உதவிக்கு துணைதேடி வீட்டை விட்டு வெளியே ஓடுகிறுள். எதிரே விளக்கொளி தென்படுகிறது. அருகே சென்றவள் திடுக்கிடுகிறுள். சற்றும் எதிர்பாராத வண்ணம், அங்கே சில போலீஸ்காரர்களையும், தன் தந்தை தாண்டவனையும் சந்திக்கிறுள். விபரமறிந்த அவர்கள் அனைவரும் வீட்டிற்கு ஓடிவந்து பார்க்கும்போது சண்டை நடந்த இடம் காலியாக இருக்கிறது. ஆனல் கொல்லைப் புறத்திலே ரத்தம் தோய்ந்த கத்தி ஒன்றையும், வெட்டுண்ட கை ஒன்றையும் கண்டு பிடிக்கிருர்கள். அதே சமயம் அவர்கள் அறியாத வண்ணம் வீட்டை விட்டு நழுவி, தன் அத்தானைத் தேடி ஓடுகிறுள் பரிமளா. நள்ளிரவிலே திக்கு தெரியாமல் ஓடிக்கொண்டிருக்கிறுள் தன் காதலனைத் தேடி...

அதே சமயத்தில்...அதே பரிமளாவைத் தேடி, அவளைத் தன் காதலி என்று எண்ணிக்கொண்டு சிவன் கோயிலுக்குள் நிற்கிறுன் துக்காராம். நள்ளிருள். காதலியைத் தேடி வந்த அவன் வெள்ளியம்பலத்திடம் சிக்குகிறுன். 'பூதம்' என்று பொய் சொல்லி அவனை மிரட்டி, புதையல் இருக்குமிடம் எதுவென்று கேட்கிருர். ஏது மறியா துக்காராம் என்ன செய்வான்? ஏதோ தப்பித்துக் கொள்ள வேண்டுமே என்ற துணிவுடன், ''புதையல் எடுக்க தகடு வைத்து மந்திரம் ஜெபிக்க வேண்டும்; அந்தத் தகடு ஒரு சாமியாரிடம் இருக்கிறது; என்னுடன் வந்தால் சாமியாரிடம் போவோம்'' என்கிறுன். அவன் சொல்லியதை நம்பிய வெள்ளியம்பலம் புறப்படுகிருர். அவரை அழைத்துக்கொண்டு பலிக் கடாவைப்போல கால் போன போக்கில் நடக்கிறுன் துக்காராம்.

ஆனல் சந்தர்ப்பமோ, 'கற்பனைச் சாமியாரை'த் தேடிக் கொண்டு போகும் அவர்கள் இருவரையும், காதலனைத் தேடி ஓடும் பரிமளாவை சந்திக்க வைத்து விடுகிறது...

பரிமளா திடுக்கிடுகிறுள். ஆனுலும் வெள்ளியம்பலத்திடம் தன் காதலன் பெயர் துக்காராம் என்று முன்பு சொல்லியிருந்தபடியால், இப்போது துக்காராமிடம் காதலன் போலவே பேசுகிறுள். மூவரும் சேர்ந்து நடக்கிருர்கள். பொழுது விடியும் நேரம். ஒரு புதரோரத்தில் முணகல் சப்தம் கேட்கிறது. கூர்ந்து பார்க்கும்போது ஒரு கையிழந்த ஐயப்பன் மரண முகப்பில் கிடப்பதைக் காணுகிருர்கள்.

பரிமளா நடந்ததை யூகித்துக் கொண்டாள். ஆனல் துக்காராமோ தான் தப்பிக்க புதுவழி தேடுகிறுன். ஐயப்பன்தான் தான் தேடிவரும் சாமியார் என்று நடிக்கிறுன். வெள்ளியம்பலம் அதற்கு மேலும் சும்மா இருப்பாரா? சாகப் போகும் ஐயப்பனிடமிருந்து புதையல் ரகசியம் அறியத் துடிக்கிருர். ஆனல் ஐயப்பனே இறுதி மூச்சு விடுமுன், ''புதையல் ரகசியம் பரிமாளாவின் காதலன் துரையிடமும், மாயாண்டிக் கிழவனிடம் சிக்கியிருக்கிறது'' என்று சொல்லிச் சாகிறுன். துரை என்று பரிமளாவுக்கு மற்றுமொரு காதலன் இருக்கிறுன் என்று எண்ணிய வெள்ளியம்பலம், ஐயப்பனின் பிணத்தை ஆழமான படுகுழி ஒன்றில் தள்ளிவிடுகிருர். பரிமளாவுக்கும், துக்காராமுக்கும் திருமணம் செய்விக்கப் போவதாகச்சொல்லி, இருவரையும் மருங்கப் பள்ளத்திற்கு அழைத்து வருகிருர். இருவரையும் தனதுவாய்க்கால்கரை வீட்டில் அடைத்து வைக்கிருர். அவர் மனம் ஒரு நிலையில் இல்லை; அவர்கள் இருவரும் உண்மையில் காதலர்கள்தானு என்று அறிய அந்த வீட்டை சுற்றிச் சுற்றி வருகிருர்.

உள்ளே.........காதல் லீலைகள் புரியவந்த துக்காராமின் கன்னத்திலே அறைந்து, தான் அவனை விரும்பவில்லை என்றும், துரைதான் தன் காதலன் என்றும் வெளியிடுகிறுள், பரிமளா. இதை ஒட்டுக் கேட்ட வெள்ளியம்பலம் துக்காராமிடம் எந்த ரகசியமும் கிடைக்காது என்று முடிவு செய்கிருர்.

மறுநாள் பகல் நேரத்தில் தாண்டவன் வருகிருர். வெள்ளியம்பலத்திடம் இரவு பரிமளாவைச் சந்தித்ததையும், துரையின் வீட்டில் ஒற்றைக்கை கிடைத்ததையும், கொலை செய்ததாகக் கருதப்படும் துரையையும், மாயாண்டிக் கிழவரையும் அன்று பேராவூரணி போலீசார் கைதி செய்திருப்பதாகவும் சொல்லுகிருர்.

அம்பலம் யோசிக்கிருர். 'புதையல் கிடைக்க துரையும் மாயாண்டியும் விடுதலை பெறவேண்டும். ஆகவே அவர்களை விடுவிக்க துக்காராமைக் கொலைகாரன் என்று சிக்கவைப்பது'—இப்படி முடிவு செய்கிருர். இதைப் பரிமளாவிடம் வெளியிடுகிருர். அவளது காதலன் துரை கொலைகாரன் என்ற குற்றத்திலிருந்து தப்ப வேண்டுமானுல், துக்காராம்தான் ஐயப்பனைக் கொன்றுன் என்றும், தான் அதைநேரில் பார்த்ததாகவும் சாட்சி சொல்ல வேண்டும் என்கிருர். பரிமளா இக்கட்டான நிலையில் நின்று தவிக்கிறுள். கதியற்ற துக்காராமைத் தூக்கு மேடையிலிருந்து காப்பாற்றுவதா? காதலைத் தியாகம் செய்வதா? அல்லது காதலனுக்குத் துரோகம் செய்வதா?—இந்த மூன்றில் எதைச் செய்வாள்? யோசிக்கிறுள். அப்பாவி இளைஞன் துக்காராமை மீட்பது—காதலைத் தியாகம் செய்வது என்று அவளது நேர்மை நெஞ்சம் முடிவு செய்கிறது!

அதே நேரத்தில் பேராவூரணி போலீஸ் ஸ்டேஷன்சென்ற வெள்ளியம்பலம், ஐயப்பனைக் கொன்றது துக்காராம் என்றும், தான் அவனைப் பிடித்து வைத்திருப்பதாகவும் கதை ஜோடிக்கிருர். அதை நம்பிய இன்ஸ்பெக்டர், துரையையும், மாயாண்டியையும் விடுதலை செய்கிருர். வெள்ளியம்பலம் துரையிடம், மறுநாள் இரவு பனிரெண்டு மணிக்கு மனோராவுக்கு வந்தால், பத்திரமாக இருக்கும் பரிமளாவைஒப்படைப்பதாகக் கூறுகிருர். இன்ஸ்பெக்டர்

★ தொடர்ச்சி 10-ம் பக்க



கொடுமை! கொடுமை!!

உமையாள்புரம்
12-10-55

ஆசிரியர் அவர்கட்கு,

தென்னாட்டில் பவனி வந்த நேரு, வேலூரில் இந்நாட்டு திராவிட மக்களை தீவிரமாக ஏசிப் பேசி இருக்கிறார்.தேசியக் கொடியை கொளுத்துவோர் என் முன் வரட்டும்! இந்தியாவே அழிந்தாலும் சரி; கொடியை கொளுத்த ஒருபோதும் விடமாட்டேன்-என்றும் கூறி இருக்கிறார். இந்தியா அழிந்தால் இவர் எங்கு இருப்பார் என்பதை மறந்து பேசி இருக்கிறார். ஒரு கோடி ருபாய் செலவில் டில்லியில் ஓட்டல் கட்டி, அயல் நாட்டுக்காரர்களை வரவழைத்து, காந்தியின் சீடர்கள் வாந்தி எடுக்கும் மதுவைக் கையிலே ஏந்தி அவர்களுக்குக் கொடுத்தும், மேல்நாட்டு முறைப்படி கூத்து வைத்தும், கோலாகலம் செய்தும் அனுப்ப திட்டம் திட்டி இருக்கிறார்கள்! இங்கே குந்த குடிசை இன்றி; கட்ட கந்தை இன்றி; அவதிப்படும் ஏழை மக்களை கவனிக்காத நேரு சர்க்காரை என்னவென்று அழைப்பது? இதைக் கண்டும் கேட்டும் நமது மந்தி(ரி)கள் பல்லைக் காட்டி பல்லவி பாடிக் கொண்டிருப்பதும் அதனிலும் கொடுமை! கொடுமை!!

அன்பன்
உ.வே. இராமசாமி,
தி. மு. க. முசிறி.

சீரழிவுக் கமிஷன்!

குரவப்புலம்
22—10—55

ஆசிரியர் அவர்களுக்கு,

தாங்கள் 'சிரழிவுக் கமிஷன் சிபார்சுகள்' என்று எழுதிவந்தது போன்றே, சிரமைப்புக் கமிஷன் சிபார்சுகளும் இருக்கின்றன. தேவிகுளம், பீர்மேடு போன்ற தமிழ்த் தாலூக்காக்களை கேரளத்துடன் இணைத்தது நீதியும், நேர்மையுமற்ற செயலாகும். நாம் "திராவிடக் கூட்டாட்சி"கோருகிறோம் என்பதற்காக கேரளத்தாரின் கெட்ட ஆசைக்கும்,மத்ய சர்க்காரின் மந்த புத்திக்கும் இடங்கொடுக்கக் கூடாது. ஆனால் அதை ஆர்பாட்டமின்றி அமைதியான முறையிலே தீர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமானாலும், அவசரமுமாகும். தேவையானால் கிளர்ச்சியும் வேண்டியதே! மீதி உள்ள 4 தாலூக்காக்களையும் தமிழகத்துடன் சேர்க்க நாம் தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு தலைமை நிலையம் தக்க ஏற்பாடு செய்யும் என எண்ணுகிறேன்.

—துரை. இராம அமுதன்.

அவரேதான்!

'திருவல்லிக்கேணி
6-10-55

அதிசயம், ஆனாலும் உண்மை! ஆசியாவின் ஜோதி, இந்தியாவின் முடிசூடா மன்னர் நேரு2-10-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு, கோட்டையின் மதில் சுவரின் மேல் நின்று பேசும்போது, கடற்கரையின் காற்றை அநுபவித்துக் கொண்டே தன்னையறியாமல் சில வார்த்தைகள் சொல்லி விட்டார்!

வடநாடு—தென்னாடு

வடநாட்டில் பொறுமையில்லாத சூழ்நிலை காணப்படுகிறது. ஆனால் தென்னாட்டு மக்கள் (தமிழர்கள்) கன்னியமானவர்களாகவும், குணசாலிகளாகவும் இருக்கிறார்கள். வர, வர எனக்கு சலிப்பு ஏற்படுகிறது. கோஷம் போடுவதும், கட்டுப்பாடு இல்லாமல் இருப்பதும் சரியான வேலை என்று வடநாட்டினர் கருதுகிறார்கள்.

முன்கோபம்

நான் சமாதானத்தை விரும்புபவன். சிலசமயம் முன்கோபம், ஆத்திரம் வருவதும் உண்டு. ஆனால் பின்னர் அதற்காக வருந்தி தவறை திருத்திக் கொள்கிறேன். நான் அசல் ஒழுக்கசீலன் அல்ல; ஆனால் நல்ல ஒழுக்கம் என்பது என்ன என்று எனக்குத் தெரியும்.

இப்படிப் பேசியிருப்பது அவரேதான்! நீங்கள் உண்மையிலேயே ஆச்சரியப்படுகிறீர்கள் அல்லவா? நான்கூட ஆச்சரியப்பட்டேன், அவரா இப்படி பேசி இருக்கிறார் என்று! ஆம்! அவரேதான்!

நாம் இரயில் நிறுத்தி கிளர்ச்சியில் ஈடுபட காரணமாயிருந்த, அவரேதான்! ஜுலை 15-அன்று ஆயிரக் கணக்கான 'மாவீரர்களை' காராக்கிரகத்துக்கு அனுப்ப காரணமான அவரேதான்!

திருந்திவிட்டார்; ஒத்துக்கொண்டார், தான் முன்கோபி என்று. சென்னையில் பேசும் போது குறிப்பிட்டார், வடநாட்டு வாலிபர்கள் நாகரிகமற்றவர்கள் என்று. வடநாட்டுக்கு சென்று யாரை நாகரிக மற்றவர்கள் என்று கூறுவாரோ?

அன்பன்
ஏ. கே. நடராசன்

மத விழாவிலே கம்யூனிஸ்டுகள்!

சிவகாசி
21—10—55

அன்புள்ள ஆசிரியருக்கு,

"மதம், மனிதனை மயக்கும் அபின்"என்று, பொதுவுடைமைத் தந்தையாம், காரல் மார்க்ஸ் கூறினார்!

மதம், எந்த அளவுக்கு மனித சமுதாயத்தைப் படுகுழியில் தள்ள வல்லது என்பதை, இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம்!

கால வேகத்தால் மனிதன் சிந்திக்கத் தொடங்கினான் என்றாலும், திராவிட நாட்டைப் பொருத்தவரையில்—திராவிட இயக்கம் தோன்றியிரா விட்டால்...?நிலைமை சிந்தனைக்கே எட்டாது!

இந்த நேரத்திலேதான் நமது கவனத்தைக்கவரும் சில வேதனை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மக்களின் நலனிலே தங்களுக்கு மட்டுமே அக்கரை யிருப்பதாக தம்பட்டமடித்துக் கொள்ளும் கம்யூனிஸ்டுகள். மதத்தைப் பற்றி மார்க்ஸ் கூறிய கருத்துக்களை எந்த அளவுக்கு அமுல் நடத்துகிறார்கள்; நடைமுறையில் கையாளுகிறார்கள் என்பதைக் காணும்போது...'மார்க்சிய வாதிகள்' என்று அவர்கள் தங்களைப் பெருமையோடு பேசிக்கொள்வதிலே அர்த்தமிருக்க முடியாது!

10—8—55-ல் நடைபெற்ற சம்பவத்தை மட்டும் உங்கள் பார்வைக்கு வைக்கிறேன்: சத்திரப்பட்டி, முளைக்கொட்டுத் திருவிழாவிலே, மாரியம்மனைத் தூக்கிச் செல்லும் சப்பரம் சுமார் 80 அடி உயரம்; அதன் உச்சியில் 'செங்கொடி'!

மார்க்சிய சித்தாந்தம் காட்டும் போதனை; வழி இதுதானா?-என்று கேட்டால்...'கலகம் செய்ய வருகிறார்கள்' என்று அறியாத மக்களிடம் ஓலமிட்டு, நீலிக் கண்ணீர் வடித்துக் கேள்வி கேட்டவனை மறைந்திருந்து தாக்க முனைகிறார்கள்!

மார்க்ஸ், இவர்கள் சொல்லையும்-செயலையும் கண்ணில் காணாது மறைந்துவிட்டார்; இன்று இருந்திருந்தால்... தூக்கிட்டுக் கொண்டிருப்பார்!!

—சி. பி. அண்ணாமலை.

கோட்சேக்கு நன்றி...?

சின்ன முதலியார் சாவடி
24—10—55

ஆசிரியர் அவர்களுக்கு,

இவ்வாரத்திய 'முரசொலி' இதழில் வந்துள்ள "புல்கானின் பார்வை"க்கு என்ற கட்டுரையில் வந்துள்ள படங்களையும், அதன் வாசகங்களையும் படிக்கும் யாராயினும் சரி; துடிதுடிக்க வைக்கும் சக்தி உண்டு அந்தக் காட்சிக்கு. நமது அகிம்சா மூர்த்திகளின் அரசாங்கத்தின் ஊழல்களை இவ்வுலகிற்கு பறைசாற்றுபவனபோல் உள்ளன அந்தப் படங்கள். ரஷ்யாவிலே, கொடியிலே பார்த்த சிகப்பை, நேரு, மக்களின் குருதியை தரையிலே கொட்டிப் பார்த்து, தமது ரத்த தாகத்தைத் தணித்துக் கொள்கிறார்.

மேலை நாடுகளில் ஐந்து சர்வாதிகாரிகள் செய்த கொடுமையை இவர் அவர்கள் உருவிலே நின்று செய்து காட்டுகிறார்.

1. இட்லர் உருவிலே மோதிலால் மைந்தர், 2. முசோலினி உருவிலே அலகாபாத் வீரர், 3. ஜார் உருவிலே நேரு, 4. டயர் உருவிலே பஞ்சசிலத்தின் பாதுகாவலர், 5. சலாசர் உருவிலே நமது பாரதத்தின் தவப் புதல்வர்.

நேருவைப்பற்றி இப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது. அதை படித்ததிலிருந்து, இதையெல்லாம் பார்த்து பரிதவித்து சாகாமல் முன்கூட்டியே காந்தியைக் கொன்ற கோட்சேயுக்கு உண்மையான காந்தி பக்தர்கள் அனைவரும் நன்றி செலுத்தவேண்டும்.

—சோ. கருணானந்தன்.

கோலாசிலாங்கூர்
மலாயா

அன்புடையீர்,

வெகுநாளைக்குப் பிறகு என் தாயகத்திற்கு மீண்டும் ஒரு அஞ்சல் அனுப்ப வேண்டிய ஆவல் உண்டானது எனது அகத்திலே.

திராவிடநாடு பெற்றபின் திராவிடக் குடிமகனாக மீண்டும் வரலாம் தாயகத்திற்கு என்ற ஆவல் துடிக்கிறது இங்கே, ஆயிரமாயிரம் காளைகளின் உள்ளங்களிலே.

ஆளும் கட்சிக்கு எதிராக போராட்டங்களை ஒரு கட்சியார் நடத்தும்போது, அவர்களுக்கு குறுக்கே மற்றொரு கட்சியார் தலையிட்டு, குழப்பமூட்டும்குதர்க்கச் செயல்அங்குதான் என்று நினைத்தோம். இங்கும் வந்துவிட்டனரே, அந்த இழிசெயல்காரர்கள்! அகிம்சையைப் போற்றியவர்கள் காலிகளாக மாறிடும்காட்சி அன்றாடம் காணவேண்டிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகி விட்டது.

பாவம், அவர்களும் நம்மை ஒழித்துக் கடிவிடத்தான் சமயம் பார்க்கின்றனர். ஒரு விந்தையான நிகழ்ச்சியைக் கேளுங்கள்: கிருஸ்தவ மதக்காரர்கள் தங்களில் ஒரு பெண்ணுக்கு வேற்று மதத்தானுடன் திருமணம் செய்விக்கும்போது, அந்த மாப்பிள்ளையை தங்கள் மதத்திலே சேர்த்துக் கொள்வது வழக்கம்.இந்த வகையிலே மதத்திற்கு ஒருவர் கூடிவிடுகிறாரல்லவா! பெண்களைக் காட்டி மதத்திற்கு ஆள் சேர்க்கும் அதே வழியைக் கையாளவும் முனைந்துவிட்டனர், இங்குள்ள மலாயன்—இந்தியன் காங்கிரஸார்.

பிரஜா உரிமைப் பத்திரம் பெறப் போகும் மக்களிடம், "நான் எடுத்துத் தருகிறேன். சுலபமாக" எனக்கூறி, அதற்காக ஒன்றரை வெள்ளி கொடுத்து அவர்களது கட்சியிலே அங்கத்தினராக வேண்டும்-என நிபந்தனை இடுகிறார்கள் கதர்க்குல்லாய்கள். மக்கள் நல்வாழ்விற்கு நாட்டமுடன் உதவவேண்டியவர்கள், பாமர மக்களை காங்கிரஸ் வலைதனில் மாட்ட நினைப்பது நேர்மையா? எப்படி இருக்கிறது இந்தப் பொதுநலப்பணி- புரட்சிப்புலிகளின் செயல்!

அன்புள்ள,
பி. கே. கலையழகன்

நடிகன் அழுதான் -

★ நாடகம் பார்த்தோரும் அழுதார்கள்! ★

லாரன்ஸ் ஆலிவர்; விவியன் லே—இந்த ஜோடிக்கு ஹாலிவுட் சினிமா உலகத்திலே கியாதி இருந்தாலும்கூட அவர்கள் நாடகத் துறையைத் துறந்துவிட விரும்பவில்லை.

ஷேக்ஸ்பியரின் நாடகங்களை புதுப்புது பாணியில் நடித்துக் காட்டுவதையே தன்னுடைய வாழ்க்கை லட்சியமாகக் கொண்டிருக்கிருர், ஆலிவர்!

அவர் தயாரித்து, டைரக்ட் செய்து, கதாநாயகனுகவும் நடித்த 'ஹாம்லெட்' என்னும் படம் எல்லா நாடுகளிலும் பிரபல மடைந்து ஆலிவரை உலகத்தின் முதல்தர நடிகனுக்கியது.

அவருடைய மனைவி விவியன் லேயும் அப்படித்தான்! சில ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டனின் முதல் நடிகையாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் !

சமயம் நேரும்போது சினிமா உலகையும் மறந்து நாடக உலகத்தில் ஐக்கியமாகிவிடும் இந்த ஜோடி, சமீபத்தில் ஸ்டிராட் போர்டில் ஷேக்ஸ்பியர் எழுதிய **'டைட்டஸ் அண்டிரானிக்கஸ்'** என்னும் சோக நாடகத்தை அரங்கேற்றினர்கள்.

விவியன் லேயும், ஆலிவரும் மேடையிலே அழும்போது கொட்டகையில் உட்கார்ந்திருக்கும் மக்கள் அனைவரும் 'கோ' வென்று கதறுவார்களாம்!

லவீனியாவாக நடித்த விவியன்லேயுடைய நாக்கையும், கைகளையும் அறுத்தெறியும் கட்டமொன்று வருகிறதாம். அந்த சோகமயமான நேரத்தில் **விவியன் லே கதறியழுவதைத் தாங்கமாட்டாது தியேட்டரிலே பத்து பேர் மயக்கம் போட்டு விழுந்து விட்டார்களாம்!**

டைட்டசாக நடித்த லாரென்ஸ் தன்னுடைய கைகளைத் தானே முறித்துக் கொண்டு, துயரம் பொங்கி வழியும் வசனங்களை உச்சரிக்கும் உச்ச கட்டத்தின் போதுதான் மயக்க மடைந்தோரின் எண்ணிக்கையும் அதிகமாயிற்ரும்!

டைட்டசினுடைய புஜ எலும்புகள் 'மடமட' வென முறியும் ஓசை எழும்போதும், அதைத் தொடர்ந்து ஆலிவர் உணர்ச்சி பொங்க நடிக்கும் போதும் ஆண் பெண் அனைவரும் கதறிக் கதறி அழுதார்களாம்!

நடிப்பின் சிகரத்தையே எட்டி விட்டது ஆலிவர்—விவியன் லே ஜோடி!

இந்த நாடக அரங்கேற்றத்தின் இடைவேளை சமயத்தில் என்றுமில்லாத வகையில் காப்பி, டீ போன்ற பானங்களின் விற்பனை அதிகமாயிற்ரும்!

மயக்கம் போட்டு விழுவோரை உடனுக்குடன் மருத்துவ மனைக்கு அப்புறப்படுத்துவதற்காக 'ஆம்புலன்ஸ்' வண்டியை அருகிலே வைத்துக் கொண்டு உணர்ச்சி மழையைப் பொழிந்து கொட்டுகிருர்கள், அங்கே!

கூத்துதான்!—அதன் மூலம் குலை நடுங்கச் செய்யும் திகிலையும், குழலோசை தரும் இன்பத்தையும் குழைத்துக் குழைத்துத் தருகிருர்கள்!

நாடகம் பார்ப்போர் நாடகம் முடிகிற வரையில் களிமண்ணுகை மாறிவிடுகிருர்கள். நடிப்புக் கலைஞன் அந்த மண் கொண்டு புரட்சிச் சின்னங்களையும் உருவாக்கலாம்; புழுதியில் புரளும் பன்றிகள் போன்ற பொம்மைகளையும் உருவாக்கலாம்!

நாம் நாடகம்—அதன் நவீன பதிப்பான சினிமா — இவை மூலம் அத்தகைய புரட்சிச் சின்னங்களைத்தான் உருவாக்க முயன்று வருகிரேம்; ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிரேம்.

டைட்டஸ் கைகளை முறித்துக் கொள்ளும்போதும், லவீனியா நாக்கை அறுத்தெறியும் போதும், மக்கள் மயக்கம் போட்டு வீழ்கிருர்கள், சோகத்தைத் தாங்கமாட்டாமல் !

நாமோ விடுதலை வீரனை கதாபாத்திரமாக்கி, நம் பண்டைய பெருமையைக் காட்சி வடிவத்தில் கொண்டுவந்து, நீ வாழ்ந்த கதையையும், வீழ்ந்த கதையையும் பார்!'—என்று சொல்லி நாடகம்பார்ப்போரை வீறு கொள்ளச் செய்ய முயலுகிரேம்!

மேல் நாடுகளிலே ஷேக்ஸ்பியரின் கற்பனைத் தோட்டத்தில் பயிரான பூக்களுக்குப் புது மெருகு தந்து புகழ் பெறுகிருர்கள்.

நடிப்புக்கலையா? மெஸ்மரிசமா?—என ஐயப்பாடு தோன்றுகிற அளவுக்கு பொது மக்களைப் பரவசப் படுத்துகின்றன.

இங்கோ நாட்டுக்கு நல்ல பயன்தரும் நாடகங்கள் ஆட்சியாளரின் எதிர்ப்புக் கணைகளைத் தாங்க வேண்டியிருக்கின்றன.

விபச்சாரத் தடைச் சட்டம் அமுலில் இருக்கும்போது கிருஷ்ணலீலா நாடகம் நடைபெறுகிறது!

ஐம்பெரும் காப்பியங்கள் இருக்க ஐயப்பனை மேடையிலே காட்டி பார்க்க வாரீர்—என மக்களைக் கூவி அழைக்கிருர்கள்!

—இந்தப் பின்னணியை வைத்துப் பார்த்தால்தான் ஷேக்ஸ்பியரையே ஜெபமாலையாய்க் கொண்டு ஹாலிவுட் வாழ்வைமறந்து நாடகத் தவம் இயற்றும் லாரென்ஸ் ஆலிவர்—விவியன் லே தம்பதிகளின் பெருமை புலப்படும்!

திரையிலே தோன்றும் நிர்வாணப் பரதேசியாம் பழனியாண்டவனைப் பார்த்துவிட்டு 'முருக! முருகா!!'— என்று கன்னத்தில் அடித்துக் கொள்ளும் அசடுகள் வாழும் இந்த நாட்டேக்கு, நடிப்பினுல் மக்களின் இதயம் கவரும் ஆலிவர் ஜோடி புதுவழிகாட்டும் துருவ நட்சத்திரம் !

வாழ்க லாரென்ஸ் ஆலிவர் தம்பதிகள்!

வளர்க அவர்கள் தொண்டு!

(ராய்ட்டர் செய்தியை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது)

★

கொடுங்கோலர் முடிவு!

அர்ஜெண்டைனு போன்ற லத்தீன் அமெரிக்க நாடுகளிலே அரசாட்சிகள் தோன்றுவதும், சுவடு தெரியாமல் மறைந்து விடுவதும், பொழுது மடிந்து பொழுது புலர்வதைப்போல; சாதாரண விஷயம்!



ஜெனரல் பேரான் என்பார் ஒன்பது ஆண்டுகளாக அர்ஜெண்டைனுவின் அரசியல் அமைப்பை தன் கைப்பிடியினுள்ளே வைத்திருந்தார். அவருடைய ஆருயிர் மனைவி ஈவா பேரான் சாகும் வரை கணவரின் வலது கரமாய் இருந்து வழிகாட்டினர். கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து அர்ஜெண்டைனுவில் சாதிக்க விரும்பியதெல்லாம் சாதித்துக் கொண்டார்கள்.

பேரான் அந்த நாட்டின் சர்வாதிகாரி! நினைத்ததை யெல்லாம் சாதிக்க முடியும் அவரால்! எதிரிகளை யெல்லாம் சிறைச்சாலைக்குள் தள்ளி பூட்டினர். தன்னுடைய வழியிலே தடைக்கற்களாய் நின்றவர்களை யெல்லாம் தவிடு பொடி செய்தார்.

இப்போது காலம் மாறி விட்டது.

எந்த ரூபத்தில் இருந்தால் என்ன; சர்வாதிகாரம் என்றுமே அதிக நாட்கள் நீடித்ததில்லை.

அர்ஜெண்டைனுவிலும் இதே கதைதான் சமீபத்தில் நடந்திருக்கிறது!

ஜெனரல் லோனுர்டி என்பவர் பேரான் ஆட்சியைக் கல்லறைக்கு அனுப்பிவிட்டு, நொந்துபோன மக்களுக்கு புத்துணர்ச்சி அளிப்பதாக வாக்களித்திருக்கிருர்.

பேரான் நாடு கடத்தப்பட்டுவிட்டார்!

இந்தச் செய்தி கேள்விப்பட்டதும் அர்ஜெண்டைனு மக்கள் அனைவரும் கரும்பு கடித்த குழந்தையைப் போல மகிழ்ச்சியால் கூத்தாடினர்களாம்!

'கொடுங்கோல் சாய்ந்தது' என்னும் கொடிகளுடன் தெருக்களை வலம் வந்தார்கள்!

சந்து முனைகளெங்கும் பொது மக்கள் கூடி பேரான் படத்துக்கும் தீ வைத்திருக்கின்றனர்!

அந்த மக்கள் கூட்டம் ஓரிடத்தில் ஈவா பேரானுடைய சிலையை தூக்கிலே போட்டுக்கொண்டாடி மகிழ்வதைத்தான் இந்தப் புகைப் படம் காட்டுகிறது!

அர்ஜெண்டைனுவின் ஒன்பதாண்டு சர்வாதிகாரச் சரித்திரம் இப்படித்தான் முடிவடைந்தது!

புதையல்......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

போலீஸார் சகிதமாக அம்பலத்துடன் புறப்படுகிறார், ஏமாளி துக்காராமைக் கைது செய்ய!

இதற்கிடையில், தன்னுடன் அடைபட்டுக் கிடந்த துக்காராமிடம் நடக்க இருக்கும் நாசத்தைத் தெரிவிக்கிறாள் பரிமளா. துக்காராமைத் தப்புவிக்க வழி சொல்லுகிறாள். ஆனால், துக்காராமோ பரிமளாவின் தூய உள்ளத்தை — தனக்காகக் காதலையே தியாகம் செய்யத் துணிந்த நற்பண்பை எண்ணி வெட்கப்படுகிறான். அவனை ஆட்டிவைத்த மிருக இச்சை ஓடி ஒளிகிறது. மனிதனாக எழுந்து நிற்கிறான் துக்காராம். அதன் விளைவு...? தன்னைக் காப்பாற்ற எண்ணிய பரிமளாவைத் தடுத்து, "நானே ஐயப்பனைக் கொன்றவன்! துரையை விடுதலை செய்யுங்கள்" என்று போலீசாரிடம் சரண் அடைகிறான்.

விடுதலை அடைந்த துரையும் மாயாண்டியும் புதுப்பட்டினம் அடைகிறார்கள். அன்று இரவு பனிரெண்டு மணிக்கு அம்பலம் சொல்லியபடி தன் காதலியைப் பெற, தன் நண்பர்களுடன் புறப்படுகிறான் துரை. ஆனால், அங்குக் காதலிக்குப் பதில் காசாசை பிடித்த அம்பலத்தினால் தாக்குண்டு வண்டியில் தூக்கிச் செல்லப்படுகிறான். நண்பர்களும் கைகால்கள் கட்டப்பட்டு விடுகின்றனர்.

ஆனால், துரை சிக்குண்ட அதே சமயத்தில், வெள்ளியம்பலத்தின் வாய்க்கால் ஓர பங்களாவில் அடைபட்டுக் கிடந்த பரிமளா, கடப்பாறை ஒன்றால் சுவற்றைப் பெயர்த்து தப்புகிறாள். அப்போது அவளைத் தேடி மருங்கப் பள்ளம் வந்த மாயாண்டியும் அவளுடன் சேர்ந்து கொள்ள, இருவரும் மனோராவை நோக்கிவருகிறார்கள். கட்டுண்டு கிடந்த துரையின் நண்பர்களைக் காணுகிறார்கள். துரை குதுக்கார அம்பலத்திடம் சிக்கிவிட்டான் என்பதறிந்து துடிக்கிறாள் பரிமளா. அவளைச் சமாதானப் படுத்திய மாயாண்டி, நீண்ட நேர யோசனைக்குப்பின், உடனடியாக புதுப்பட்டினம் சென்று, ஆனந்தன் என்ற துரையின் நண்பனுடைய வீட்டில் தங்குவது என்று முடிவு செய்கிறார்கள்.

துரையைக் கொண்டு சென்ற அம்பலம், பரிமளா தப்பியது கண்டு தத்தளிக்கிறார். ஆகவே துரையை, வாய்க்கால் ஓர வீட்டில் அடைக்க மனமின்றி, கிராமத்துக்குள்ளிருந்த தனது பெரிய வீட்டில் அடைக்கிறார். புதையல் ரகசியம் கேட்டு துரையை சித்ரவதை செய்கிறார். ஆனால், அந்த வீட்டிலே துரைக்கு உதவ ஒரு பெண் முன் வருகிறாள். உணவும் தேநீரும் அளித்து ஆதரவு தருகிறாள். மேனகா என்ற பெயருடைய அந்த இளமங்கை, சந்தர்ப்பம் செய்த சதியினால் வெள்ளியம்பலத்தின் மனைவியாக அக்கப்பட்டவள். தக்க விருந்தைத் தேடி அலைந்து கொண்டிருந்த அவளது இளமை, துரையின் வாலிப வனப்பை நாடியது.

இந்நிலையில் "இந்த வீட்டு ஐயாவுக்கு புதையல் கிடைக்கப் போவுது" என்று சொல்லிக் கொண்டு ஒருநாள் ஒரு குடு குடுப்பைக்காரன் வருகிறான். அவனது 'அளப்பு'களில் மயங்குகிறார் அம்பலம். குடு குடுப்பைக்காரன். அன்று இரவு 'மா' என்ற முதல் எழுத்தைப் பெயராகக் கொண்ட ஒரு கிழவன், புதையல் தோண்டப் போவதாக அறிவிக்கிறான். அத்துடன் துரையிடமிருந்து ரகசியம் ஏதாவது கிடைக்கலாம் என்று எண்ணி, குடு குடுப்பைக்காரனை துரையின் அறைக்குள் அனுப்புகிறார். அவனறியாமல் மேனகா துரையிடம் தனது ஆவலைத் தெரிவிக்க முயலுகிறாள். துரை தன் இச்சைக்கு இணங்கினால் அங்கிருந்து தப்ப முடியும் என்றும் சொல்லுகிறாள். அது கேட்ட குடு குடுப்பைக்காரன் குறுக்கிட்டு, துரையிடம், மேனகாவின் ஆவலை நிறைவேற்றுமாறு தூண்டுகிறான். பயனில்லை.

ஆனால்... தன் மனைவியின் 'திருவிளையாடல்கள்' எதையும் உணராத அம்பலம், அன்று இரவு புதையல் எடுக்கப் போவது யார் என்று அறிய சிவன் கோவிலுக்குச் சென்று மறைந்திருக்கிறார், தன் ஆட்களுடன். மாயாண்டி வருகிறார். "எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே..."என்று துவங்கும் பாடலை உச்சரித்துக் கொண்டே ஓரிடத்தில் தோண்ட, ஒரு தவலை கிடைக்கிறது. அதனுள் சுருட்டப்பட்ட தகடு ஒன்றும் கிடைக்கிறது. படிக்கிறார். மீண்டும் கோபுரத்திற்குப் பின்புறம் சென்று ஒரு மாமரத்தடியில் ஓரிடத்தை அளந்து பார்த்து, "புதையல் கிடைக்கப் போகிறது!" என்று கத்திக் கொண்டு தோண்டுகிறார். அந்த நேரத்தில் அம்பலம் ஓடிவந்து மாயாண்டியைப் பிடித்துக் கொள்கிறார். மாயாண்டி பயப்படுகிறார். புதையல் கிடைத்தால், இருவரும் சமபங்காகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்ற திட்டத்துடன் அம்பலத்தின் ஆட்கள் குழி தோண்டுகிறார்கள். உள்ளே ஒரு பெட்டி கிடைக்கிறது. அதனுள்ளும் ஒரு சிறிய பெட்டி—உள்ளே ஒரு தகட்டுச் சுருள் இருக்கிறது. அதில் "இங்கிருந்து நூறு கெஜ தூரத்தில் வெட்டு — பொன் கிடைக்கும்"—என்று எழுதியிருக்கிறது. நாளைக்குத் தோண்டுவது என்ற எண்ணத்துடன் திரும்புகிறார்கள்.

அதே நேரத்தில், மலையாள பகவதி வேஷத்தில் தன் பக்கத்தில் படுத்திருப்பது வேறு யாருமல்ல ; பரிமளா என்பதை உணர்ந்து மகிழ்கிறான் துரை.

மறு நாள் பொழுது விடிந்ததும் குறிப்பிட்ட இடத்தில், பள்ளி மாணவர்களுக்கு கிணறு—என்ற பெயரைச் சூட்டி அம்பலம் குழி தோண்ட ஆரம்பிக்கிறார். நீர் ஊறியது. இரவு வந்து புதையலைத் தேடுவது என்ற எண்ணத்துடன் திரும்புகிறார்கள். இதற்கிடையில் மேனகா, துரையுடனும், குடுகுடுப்பைக்காரன் உருவில் இருக்கும் பரிமளாவுடனும் தப்பி விடுவது என்று முடிவு செய்கிறாள்.

இரவு நெருங்கியதும் மாயாண்டியும் அம்பலமும் கிணற்றுக்குச் செல்கிறார்கள். மாயாண்டி கிணற்றுக்குள் இறங்கித் தேட ஒரு பெட்டி கிடைக்கிறது. உள்ளே இம் முறையும் தகடுதான் அகப்படுகிறது. அதில் "திருமணமான தம்பதிகளைத் திருமணத்தன்றே கொலை செய்து, அந்த ரத்தத்தைத் தெளித்தால் புதையல் கிடைக்கும்" என்று காணப்படுகிறது. மாயாண்டி பயப்படுகிறார். ஆனால் அம்பலமோ, திருமணத்திற்கு எந்தப் பெண்ணையும் ஆணையும் தேர்ந்தெடுப்பது என்று யோசித்தபடியே வீடு திரும்புகிறார்.

திட்டமிட்டபடியே மேனகா அம்பலத்திடமிருந்து சாவியைத் திருடி, பெட்டி ஒன்றை எடுத்துக் கொள்கிறாள். துரையையும் பரிமளாவையும் விடுவித்து, மூவரும் சுவரேறிக் குதித்து தப்பும் நேரத்தில், வெள்ளியம்பலம் பார்த்து, கத்தியை வீசுகிறார், துரையின் மீது! அதை மேனகா தன் மார்பில் தாங்கி மரணப் படுக்கையில் வீழ்கிறாள். குடு குடுப்பாண்டியோ— யாருமறியாமல் அறைக்கு வந்து படுத்து விடுகிறான். துரை பிடிபட்டு வேறு ஒரு அறையில் அடைக்கப் படுகிறான்.

மேனகாவைக் கொன்ற பழி தன்மேல் விழும் என்று பயந்த அம்பலம், அக் கொலைக் குற்றத்தை குடு குடுப்பைக்காரன் மீது சுமத்தி, அவனைக் கைது செய்ய போலீசுக்குத் தகவல் அனுப்புகிறார், ராமன் மூலம். ராமன் செல்லும் வழியில் ஷோக் சுந்தரி என்ற பெயர் கொண்ட ஒரு பெண்ணை சந்திக்கிறான். அவள் இலங்கைவாசி என்றும், ராமன் மேல் காதல் என்றும் வெளியிடுகிறாள். ராமன் அவளது பாகு மொழியில் மயங்கி, முதலாளி தனக்கிட்ட பணிகளை அவளிடம் சொல்லி விடுகிறான். பின் அவளிடம் பிரியா விடை பெற்று பேராவூரணி போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் செல்கிறான்.

ஷோக் சுந்தரி அம்பலத்திடம் வந்து உதவி கோருகிறாள். அவள் திருமணமாகாதவள் என்பதை அறிந்த அம்பலம், ஏதோ முடிவு செய்து அவளையும் குடு குடுப்பைக்காரனின் அறையில் அடைக்கிறார். அவளை துரைக்குத் திருமணம் செய்வித்து, இருவரையும் புதையலுக்குப் பலியிடப் போவதாகவும் மாயாண்டிக் கிழவரிடம் சொல்லுகிறார். போலீஸ் ஸ்டேஷன் சென்று திரும்பிய ராமன், இதை மறைந்திருந்து கேட்கிறான். பின், சப் இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனில் இல்லை என்றும், வந்ததும் வருவார் என்றும் அம்பலத்திடம் சொல்லிவிட்டு, தன்காதலிக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தை நினைத்து வருந்துகிறான். இந்தச் செய்தியை பகவதி உருவில் இருக்கும் பரிமளாவிடம் சொல்கிறான். ஷோக் சுந்தரியின் நிலை கண்டு வருந்திய பரிமளா, அவளுக்காகப் பரிதாபப் படுகிறாள். ஆனால் ஷோக் சுந்தரியோ தன் உடைகளை களைந்து துக்காராமாக நிற்கிறாள்! பரிமளா வியக்கிறாள். தங்கையை காண வேண்டுமென்ற பாச உணர்ச்சி மேலிட சிறையிலிருந்து தப்பி வந்தேன்—என்கிறான் துக்காராம். பரிமளா யோசிக்கிறாள். துக்காராமை குடுகுடுப்பைக்காரன் உருவில் தப்புவித்துவிட எண்ணி வேஷ மாற்றம் செய்கிறாள். துக்காராம் குடுகுடுப்பைக்காரன் உருவைத் தான் ஏற்று, பரிமளாவை மேனகாவைக் கொன்ற ஜோடிப்புக் குற்றத்திலிருந்து தப்புவிக்க முடிவு செய்கிறான். சற்று நேரத்தில் துக்காராம் குடுகுடுப்பைக்காரனாக மாறுகிறான்.

அதே சமயம் பருவ மலராக— பளிங்குச் சிலையாக காட்சியளித்த மேனகா, நிரந்தர விடுதலை பெற்று விட்டாள்.

புல்கானின் பார்வைக்கு....

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

"உல்லாசப் பொழுது போக்கு இல்லையா? அட, பைத்தியக்காரா! அதோ பத்மவிபூஷணியின் பாட்டுக் கச்சேரி! இதோ படக்காட்சிசாலை! உனக்கு என்ன பஞ்சம்!"—என்று புத்திசொல்லப் போனாலும் பட்டினிப் பட்டாளத்தின் தலைவன். அதைப் போலத்தான் இருக்கிறது பஞ்சசீலக் கொள்கையும், நேருவின் வெளிநாட்டுப் படையெடுப்பும்!

உணவு வேண்டுமென்பது மனிதனின் அடிப்படை கோரிக்கை. உல்லாசம்வேண்டுமென்பது வயிறு நிறைந்த பிறகு மனிதனுக்கு ஏற்படுகிற தேவை!

"உன் நாட்டுமக்கள் பசி என்கிறார்கள்; அதற்கு நீரோ; 'பாதாம் அல்வா என்கிறார்கள் போலந்து நாட்டார்; நினைத்த போதெல்லாம் இனிக்கிறது என்கிறார் ஆந்தோனி ஈடன்; யூகோ நாட்டுக்காரர் 'ஓகோ!' என்றுப் புகழ்கிறார்; புல்கானினோ புளகாங்கித மடைந்து விட்டார்'—என்று சொல்லி பசிகாரர் முன்னிலையில் பஞ்சசீலத்தைப் பிரித்துவைத்தால் என்ன பிரயோஜனம்? 'பஞ்சைகள் சீலத்'தை ஒழித்துவிட்டு அல்லவா நீர் பஞ்சசீலம் பேச வேண்டும் !"

—புல்கானின் இப்படியெல்லாம் நேருவைப் பார்த்துக் கேட்பார், நாம் அவருக்கு இந்த நாட்டின் பாதாள லோகத்தைத் திறந்து காட்டினோமானால்!

பிள்ளையாருக்குக் கோவிலுண்டு; ஆனால் பிள்ளைகுட்டிகளோடு வாழும் மக்கள் உறங்கிட ஒரு குடிசையில்லை! இந்த இழிநிலை தெரிந்திருந்தால் ரஷ்ய நாட்டு மக்கள் நீர்வந்தபோது கருப்புக் கொடியல்லவா காட்டியிருப்பார்கள்! — இப்படிப் பேசட்டும் புல்கானின் மனசாட்சி!

— மாறன் எம். ஏ.

போலீஸ் வருகிறது. இரண்டாவதாக தியாகம் செய்யத் துணிந்த துக்காராமை குடுகுடுப்பைக்காரன் உருவில் விலங்கிட்டு அழைத்துச் சென்றது, மேனகாவைக் கொன்றான் என்ற குற்றத்தோடு! பரிமளாவோ ஷோக் சுந்தரியின் உருவோடு, தன் காதலன் துரையுடன் திருமணம் நடைபெற—அதன் பிறகு பலிபீடம் செல்ல—காத்திருக்கிறாள்.

ஆசைக்காரப் பிசாசாம் அம்பலத்தின் அகண்ட வயிற்றை நிரப்புவதற்காக, வாழ்க்கையைப் பாலைவனமாக்கிக் கொண்ட இந்த பரிதாபத்திற்குரியவர்களுக்கு மத்தியில், அந்தப் புதையல் வெறியனின் நெஞ்சத்திலே கொழுந்துவிட்டெறிந்த பேராசைத் தீயைப் போல...மேனகா எறிந்து கொண்டிருந்தாள், இடுகாட்டிலே......

[வளரும்]

பிறை வானம்

..பிள்ளைகள் பகுதி..

'ஜிப்சி'ப் பெண்!

வீட்டில் உள்ளவர்களுக்குப் பெரிய ஆச்சரியத்தை அளித்துக் கொண்டு—"இதென்ன விசித்திரம்!" என்று அம்மா மூக்கிலே விரல் வைத்து வியக்க — வீட்டு வாசலில் 'நல்ல பெண்'ணாக உட்கார்ந்திருந்தது செல்வி! இதில் அப்படியென்ன புதுமை இருக்கிறது என்று கேட்கிறீர்களா? புதுமைதான்! கணநேரம்கூட ஓய்ந்திருக்காத செல்வியின் குறும்புக்கரங்கள், பேசாமலிருப்பதென்றால்......? துருதுரு வென்று வீட்டின் வாசலுக்கும் கொல்லைக்கும் ஓடிக் கொண்டிருக்கும் கால்கள், அமைதியாக உட்காருவதென்றால்...? புதுமைதானே!

ஆனால் செல்வியின் மனமோ அந்த நேரத்தில் என்ன பாடு பட்டுக் கொண்டிருந்தது தெரியுமா? "...ம்...இப்ப நான் என்ன செய்வேன்? இந்த கிண்டல்கார முத்து அண்ணனின் கொட்டத்தை எப்படி அடக்குவேன்?" என்று முணுமுணுத்தது. யோசித்துக் கொண்டேயிருந்தது. முத்துவுக்கும் செல்விக்கும் இடையே என்ன நேர்ந்துவிட்டது? இருவருக்கும் சண்டைவரக் காரணம் தான் என்ன? அன்று மாலை பள்ளியில் நடைபெற்ற சம்பவம் ஒன்றை நான் உங்களுக்குச் சொல்லியாக வேண்டும்.

பள்ளிக்கூட 'மாணவர் மன்ற'த்திலே வருடாந்திர போட்டிப் பந்தயங்களுக்கான ஏற்பாடுகளை ஆரம்பித்தார்கள். போட்டிகளில் கலந்துகொள்பவர்களின் பெயர்களைப் பதிவு செய்தார்கள். அதிலே 'வேஷப் போட்டி'யில் கலந்து கொள்ள முத்து பெயர் கொடுத்தான். செல்வி சும்மா இருக்குமா? உடனே அதுவும் தன் பெயரைச் சொல்லியது. இதில்தான் வந்தது தகராறு! "நீ பெரிய திறமைசாலி; வேஷப் போட்டிக்கு வருகிறாளாம். நான் கலந்துகொள்ளப் போகும் போட்டி—தெரியுமல்லவா?" என்றான் முத்து.

"எல்லாம் தெரியும் துரைவாள்! உங்களைத் தோற்கடித்து—முகத்திலே கரியைப் பூசி—'எங்கள் அண்ணன் பௌடர் போட்டிருக்கான் பாருங்கடீ'ன்னு என் தோழிகளிடம் காட்டவேண்டாமா? அதற்குத்தான் உங்களுடன் போட்டிக்கு வருகிறேன், ஐயாமாரே!" என்றது செல்வி!

"சீ, சீ! கிண்டலா செய்கிறாய்? குட்டினால் தலை வயிறுக்கு ஆகாரமாகிவிடும்...ஆமாம்!" என்றான் முத்து. கையை ஓங்கினான், தலையிலே குட்டுவதற்கு.

நழுவி ஓடி தப்பித்துக்கொண்ட செல்வியோ, சிரித்தது. வாயில் விரலை வைத்துக்கொண்டு கலகல வென்று சிரித்தது.

முத்துவுக்குக் கோபம் வந்துவிட்டது! அந்தக் கோபம் சொற்களாக மாற, இருவரும் கத்திக் கொண்டார்கள். கடைசியில் அலறல் அடங்கியது, ஒரு ஏற்பாட்டின் மூலம். அதாவது அவர்களுக்குள்ளேயே ஒரு போட்டி! வேஷம் போட்டுக்கொண்டு அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் ஏமாற்றிக்கொள்ளவேண்டும்; முதலில் யார் ஏமாந்தாலும் மற்றவருக்கு பதினைந்து மிட்டாய்கள் வாங்கித் தந்துவிடவேண்டும் — இப்படிப் போட்டி!

அதன் விளைவாகத்தான் செல்வி சிந்தை கலங்கி—'செய்வதுஎன்ன? முத்துவை ஏமாற்றுவது எப்படி?' என்ற தீவிர யோசனையுடன் உட்கார்ந்திருக்கிறது!

* * *

அந்த சமயத்தில்......

"ஓ...ஐயா! ஓ...அம்மா!"என்ற சப்தம் தெருவிலிருந்து எழும்பியது. செல்வி திடுக்கிட்டுப் பார்த்தது. அங்கே ஒரு 'ஜிப்சி'ப் பெண் வந்து கொண்டிருந்தாள். 'ஜிப்சி' என்றால் தெரியுமல்லவா? அழகான உடம்பின் மேல் கண்டதை எல்லாம் அள்ளிப் போட்டுக்கொண்டு அலங்கோலமாக நிற்பார்கள்! தலையிலே துணியால் வேடிக்கை முண்டாசு—காதிலே பெரிய பெரிய குண்டலங்கள்-கழுத்திலே தூக்க முடியாத அளவு கண்ணாடி நகைகள்—முகத்திலே வர்ணப் பூச்சு — இடுப்பிலே பலவர்ணப் பாவாடை—காலிலே சலங்கை—இப்படி இன்னும் என்னென்னவோ அணிந்திருப்பார்கள்! பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும். அவர்களுக்கு நிரந்தர இடம் கிடையாது. நாடு சுற்றுவார்கள்—ஆடுவார்கள்—பாடுவார்கள்—பொருள் சேர்ப்பார்கள்—அதைக் கொண்டு சாப்பிடுவார்கள். இது தான் அவர்களது தொழில்!

அந்த ரகத்திலே சேர்ந்த ஜிப்சிப் பெண்ணைப் பார்த்ததும் செல்விக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அவளைக் கையைக்காட்டி அழைத்தது. அவளும் வந்தாள். வந்ததோடு மட்டுமல்ல; "ஓ...சின்னம்மா! சலாம் வருதுங்க... ஆட்டம் வேணுமா?... அல்லது பாட்டு வேணுமா?" என்றாள். கையிலிருந்த சலங்கை கட்டிய தகரக் குவளையில் "ஜல் ஜல்" என்று தட்டினாள்! புரியாத பாஷையிலே ஏதோ பாடினாள்! ஆடினாள்!

செல்விக்கு ஏக மகிழ்ச்சி! சிரிப்புக்கிடையே அது ஒரு யோசனை செய்தது. உடனே அந்த ஜிப்சியை அருகில் அழைத்தது. "ஏ ஜிப்சி! எனக்கு ஒரு உதவி செய்வாயா?" என்று கேட்டது.

"உதவியா? சின்னம்மாவுக்கு என்ன வேணும்?"

"உன் உடைகள் கொஞ்சம் வேணும்! ஒரு அரை மணி நேரத்துக்கு வாடகைக்குத் தாயேன். இந்தா, இதை வச்சுக்க"

—கெஞ்சுவதைப் போல சொல்லிக்கொண்டே, செல்வி அந்த ஜிப்சிப் பெண்ணின் கையில் ஒரு எட்டணா நாணயத்தை வைத்தது.

அதை வாங்கிக் கொண்டே, "உங்களுக்கு ஏம்மா இதெல்லாம்?..." என்று கேட்டாள் ஜிப்சி.

"ஏனா? என் அண்ணன் ஒருத்தன் இருக்கான். அவன் கொட்டத்தை அடக்கி சிரிக்கத்தான்! அதிருக்கட்டும்; நீ உள்ளே வா! அந்த அறையிலே என் துணிகள் இருக்கிறது. நீ உள்ளே போய் வேறு உடை உடுத்திக் கொள். உன் உடைகளைப் பிறகு நான் வந்து உடுத்திக் கொள்கிறேன். என்ன, சரிதானே!" என்றது செல்வி.

"ஐயோ! வேண்டாம்மா! எனக்கு வெக்கமா இருக்கம்மா!" என்று சினுங்கினாள் ஜிப்சி.

"அடாடா! இதிலென்ன வெட்கம்! இன்னும் கொஞ்ச நேரம் கழித்துப்பாரேன்; வெட்கத்தால் தலை குனிந்து அழப் போகிறான், என் அண்ணன்! உன் தயவுதான் வேணும். நீ போ உள்ளே!"என்று கெஞ்சிற்று செல்வி. ஜிப்சிப் பெண்ணைப் பிடித்து அறைக்குள் தள்ளியது!

கொஞ்ச நேரம் சென்றது. அறைக்குள் நுழைந்த ஜிப்சிப் பெண் வெளியில் வரவில்லை.

செல்விக்கு அவசரம் தாங்க முடியவில்லை. இருக்காதா? அண்ணனை அல்லவா தோற்கடிக்கப் போகிறது? "ஏ, ஜிப்சி!......இன்னும் என்னடி செய்கிறாய்? நான் உள்ளே வரட்டுமா?"என்று கத்தியது.

உள்ளேயிருந்து பதில் வந்தது! "தாராளமாக வரலாம்! ஆனால் கையோடு பதினைந்து மிட்டாய்களும் வரட்டும்!" என்ற சப்தம் கேட்டது!

'திக்' சென்றது செல்விக்கு! இது யாருடைய குரல்? இதென்ன புதுமை?—என்று கண நேரத்தில் மனதில் பல மோதல்கள்! 'குப்' பென்று அறைக்குள் பாய்ந்தது! அங்கே வேஷத்தைக் கலைத்துவிட்டு, தனது சொந்த உடையை மாட்டிக் கொண்டு ஜிப்சி அல்ல; கனம் முத்து அவர்கள் நின்று கொண்டிருந்தார்!

"ஐயையோ!" என்று வாய் விட்டுக் கதறிவிட்டது செல்வி!

முத்துவா சும்மா இருப்பான்?

"முகத்திலே கரிபூச வேண்டிய அம்மாவே! ஏமாந்ததும் ஏனோ—எனக்குச் சொல்லலாமோ?...எங்கே பதினைந்து மிட்டாய்கள்?" என்றான் கிண்டலுடன்.

செல்வி முகத்தில் கையைப் புதைத்துக் கொண்டு ஓடியது, மிட்டாய் வாங்க!

—சொர்ணம்

'பேப்பர்' விற்ற பெரிய மனிதர்கள்!

(நான்கு பேர் கூடும் இடங்களிலே-பஸ் நிற்குமிடங்களிலே-புகைவண்டி நிலையங்களிலே—நாம் தினம் தவறாமல் பரிதாபகரமான காட்சி ஒன்றைக் காணுகிறோம். நம்மில் இரக்க நெஞ்சம் கொண்டவர்கள் கண்ணீர் விடவும் செய்திருக்கிறோம். அப்படி எதைச் சொல்லுகிறீர்கள் என்கிறீர்களா?

"பேப்பர்; பேப்பர்" என்று ராகம்போட்டுக் கூவிக்கொண்டு திரிகிறார்களே, அந்தச் சிறுவர்களைத்தான் குறிப்பிடுகிறேன். "பின்னே என்ன? ஏழையாகப் பிறந்தான்; ஏழையாகவே வளருகிறான்! அது அவன் தலை விதி—எழுதின தலை எழுத்தை மாற்ற முடியுமா?" என்று சில வேதாந்திகள் அவர்களது நிலைக்கு விளக்கம் தருவார்கள். தவறு—பெரும் தவறு! அப்படி பேப்பர் விற்று, பின்னால் பெரிய மனிதர்களானவர்களின் கதைகள் வரலாற்றிலே காணக் கிடக்கின்றன.)

அவன் ஏழைதான்; பசி-பட்டினி-பஞ்சைக் கோலம்-இவைகளைத்தான் அவனது தந்தை அவனுக்குப் பரிசாக அளித்துவிட்டு செத்தார். என்ன செய்வான் அவன்? "பசி" என்று கையேந்தவோ — அப்படிப் பிச்சை எடுத்ததை ருசியாக உண்ணவோ விரும்பவில்லை; வெட்கப்பட்டான். அதன் முடிவு? பருத்தி ஆலை ஒன்றில் கூலிக்காரன் ஆனான். மாடென உழைக்க — ஓடெனத் தேய—பாடெல்லாம் பணமாக மாறுகிறதே—முதலாளியின் உல்லாச வாழ்வுக்குப் படிகளாக அமைகிறதே—என்று வருந்தினான். அந்த வேலையை வெறுத்து உதறினான்.

அன்று முதல் நகரத்தின் வீதிகளிலே அவன் திரிந்தான்; சோம்பேறியாக அல்ல; வேலையற்றவனாக அல்ல; "பேப்பர்; பேப்பர்" என்று கூவிக்கொண்டு! 'ஸ்டாண்டர்ட்' என்ன பத்திரிகையை விற்கும் பையனானான், அவன். பனிரெண்டாவது வயதிலே பத்திரிகை விற்றான்; ஆனால் பதினெட்டாவது வயதில்...? அதே 'ஸ்டாண்டர்ட்' பத்திரிகை நிலையத்தில் 'சர்க்குலேஷன் மானேஜ'ராக அமர்ந்தான்!

அவன்தான் பின்னால் ஏழைகளின் நிலை பற்றி ஏராளமான நூல்கள் எழுதி—பொருள் குவித்து—திக்கற்றோர் வாழ்வு உயர அதை அர்ப்பணித்த வள்ளல் ரேயினால்ட்ஸ்!

ரெயினால்ட்ஸ் மட்டுமல்ல; இதோ—பேப்பர் விற்ற பெரிய மனிதர்களின் பட்டியல் பாருங்கள்:

விஞ்ஞான உலகு பெற்ற மேதை தாமஸ் ஆல்வா எடிசன்—உலகப் புகழ்பெற்ற அறிஞன் பெஞ்சமின் பிராங்களின்—'மோட்டார் பேரரச'னான ஹென்றி போர்ட்—இவர்கள் எல்லாம்கூட சிறிய வயதிலே செய்தித்தாள் சுமந்திருக்கிறார்கள்!

'எழுத்தாணி'

டி. பெருமாள்; பூனா.

(?) இந்திய சரித்திரம் எதிலிருந்து துவங்குகிறது?

திராவிடரின் வரலாற்று ஏட்டில் ஆரியக் கறையான் புகுந்து அழித்ததிலிருந்து!

ப. மணவாளன்; திருச்செங்கோடு.

(?) துயரத்தை மறக்கும் வழி என்ன?

தாங்கமுடியாத துயரத்தைத் தருவித்துக் கோள்வதுதான்!

ம. ஆறுமுகம்; கரூர்.

(?) பதவி போன ஒரு மந்திரியின் நிலை எப்படி இருக்கும்?

மனச்சாட்சி திரும்பக் கிடைத்ததுபோல திருப்தியாக இருக்கும்.

இந்த வாரம் பரிசு பெறும்
தோழர்:
(●) எஸ். எம். மணிசேகரன்,
ரஹ்மானியா ஹோட்டல்,
(தண்ணீர் தேக்கம் பக்கம்,)
பாளையங்கோட்டை.

கே. ஏ. சமால் மூகமது;
அய்யம்பேட்டை.

(?) பிறரைப் பிஞ்சில் பழுத்த பழம் என்று கூறுவோர் யார்?

காம்பிலே கருகிய மொட்டுகள்!

எம். எப். பாபு; மயிலை.

(?) மனித வாழ்வில் பயன் அடைந்தவர்கள் யார்?

பாட்னாவிலே நடந்த தோட்டா தர்பாருக்குத் தப்பியவர்கள்!

(?) பிரதமர் வருவதற்கு முன் பிச்சைக்காரர்களைப் பிடிப்பதேன்?

அந்த நாடோடிகளுக்கு ஓட்டுரிமை கிடையாதே; அதனால்தான்!

ம. குருசந்திரன்; திருகோணமலை.

(?) தீமை செய்தவர்களை எங்கே தள்ளலாம்?

மாட்டுப் பெட்டிக்காரர்களின் கோட்டைக்கு!

தயா. ஜெயபால்; காரமடை.

(?) ஆண்டவரின் வயது என்ன?

மனிதன் எப்போது மூடநம்பிக்கைக்குப் பலியானான் என்பதற்கு ஜாதகம் கிடையாதே! அதைச் சோதித்த பிறகுதான் ஆண்டவனுடைய வயதைச் சொல்ல முடியும்.

(?) கடவுள் எதுவரை படித்திருக்கிறான்?

கோவிலிலே விற்பனையாகும் அர்ச்சனைச் சீட்டைப் புரிந்துகொள்ளுகிற அளவுக்கு!

(?) சந்தர்ப்பவாதி எப்போது சவுக்கடி பெறுகிறான்?

சாமான்யர்கள் சண்டமாருதமாக மாறும்போது!

நடராசன்; பேரம்பூர்.

(?) ஆச்சாரியாரின் அடுத்த ஆராய்ச்சி என்னவாக இருக்கும்?

அவருடைய தோல்வியைப்பற்றி ஆராய்ச்சி நடத்தினால் அது அவருக்கே நன்மையாக இருக்கும்!

மா. தங்கை மணியம்;
திருச்சேறை.

(?) உலகத்தில் கஷ்டமில்லாத தொழில் எது?

கவர்னர் வேலை பார்ப்பது!

ஏ. ஹக்கீம்; அரகண்டநல்லூர்.

(?) மது தரும் போதைக்கும், மங்கை தரும் போதைக்கும் உள்ள வித்யாசம் என்ன?

நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் மது தரும் போதை சட்டவிரோதம்! மற்றது சட்ட வரம்புக்கு உட்பட்டது!—அவ்வளவுதான்!

கே. தனம்; கும்மம்பட்டி.

(?) கற்றறிந்த மூடன் யார்?

ஆய்வுக்கூடத்திலே ஆராய்ச்சியை முடித்துவிட்டு ஆயுதபூஜை நடத்துபவன்!

அ. ஸ்ரீராமுலு; திருவல்லிக்கேணி.

(?) இந்திய அரசியல் வானில் புதிய முகம் யார்?

இந்திரா காந்தி! அவரைத்தான் 'புதிய ஸ்டார்' என்கிறது 'பிளிட்ஸ்' ஏடு!

துரை. வெங்கடாசலம்;
அரியலூர்.

(?) கேள்வி கேட்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கேள்வி கேட்டே காலம் தள்ளியவர்கள், பதில் சொல்லி பலன் அனுபவிக்க வேண்டிய நேரம் தான் 'பிரெஞ்சுப் புரட்சி'கள் தோன்றும் நேரம்!

கு. கந்தசாமி; ஏந்தல்.

(?) காங்கிரசில் உள்ளோர் நேருவைக் கடவுளாகக் கொண்டாடுவது ஏன்?

கவர்னர் பதவியா? — கடல் கடந்த நாட்டின் தூதுவர் பதவியா?—எது வேண்டும்?— என்று வரம் கொடுக்கும் வலிமை அவர் கையில்தானே இருக்கிறது; அதனால்தான்!

(●) எஸ். எம். மணிசேகரன்;
பாளையங்கோட்டை.

(?) திருப்பதி மொட்டையால் கிடைக்கும் வருமானம் ஆந்திராவுக்குச் சொந்தமானால் காசி யாத்திரையால் கிடைக்கும் வருமானம் வடநாட்டுக்குச் சொந்தமாகிறதே!

ஆமாம்; இந்தச் சிற்றறிவுகூட சில சின்னதுகளுக்கு இருப்பதில்லையே! என்ன செய்வது!

தாமரைச் செல்வன்;
அல்லிநகரம்.

(?) பரத்தையின் படுக்கையில் இருந்துகொண்டு பகவத் கீதை

கோடு போடச் சொன்னோம்...

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

வெளி மாநிலத்தவரை இங்கு திணித்து சுரண்டல் பூமியை விரிவுபடுத்த நினைக்கிறார்கள்!

பொதுச் செயலாளர் அறிக்கை கூறுவதைப்போல, மாநிலங்கள், தம்மிடம் ஆட்கள் இல்லாத நிலையில், தேவையான நிபுணர்களை வெளி மாநிலங்களிலிருந்தோ—வெளி இடங்களிலிருந்தோ வேண்டுமானால் வரவழைத்துக் கொள்ளலாம்! ஆனால் அதைவிட்டு எல்லாவற்றிலும் சரிபாதி 'அவர்களுக்கு' என்பதிலே என்ன நியாயம் இருக்கிறது?

தென்னகத்தில் இந்திப் பல்கலைக் கழகமாம்!—மிரட்டுகிறார்கள் இப்படி!

ஆனால் வடநாட்டில் தென்னக மொழியொன்றை பல்கலைக் கழக பாடதிட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாமாம்!— மயக்குகிறார்கள், இப்படி!

இப்படி மிரட்டலும், மயக்கலுமாக ஏக இந்திய ஏகாதிபத்ய வலை நம்மைப் பிணைக்க வருகிறது!

இந்தியும் வேண்டாம்; எங்கள் மொழியும் அங்கே சேர்க்கப்பட வேண்டாம்— இதைத்தான் பசுவ் அலிக் குழுபோன்ற இந்தி ஏகாதிபத்யத்தின் வெளிப் படையான ஏஜண்டுகளுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறோம்.

★

பாராயணம் செய்வோனுக்கும், பண மூட்டையின்மேல் படுத்துக்கொண்டு பாரதத்தில் சோஷலிசம் புகுத்துவோம்— என்று சொல்வோனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஒருவன் ஆண்டவநேசன்; மற்றவன் ஆவடிநேசன்-இதுதான் வித்தியாசம்!

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

நாட்கள் மறைந்தாலும் நறுமணம்
மாறாத தன்மையுள்ள
ஸ்ரீகிருஷ்ணா
பன்னீர்
ரோஸ்வாட்டர்··ஓமவாட்டர்··வினிகர்
தடம்புளிப்பு····சோம்புவாட்டர்
டிஸ்டில்வாட்டர்··ரோஸ்குல்கந்து
118 PORTUGUESE CHURCH ST. MADRAS-1

எல்லாக் கடைகளிலும்
கிடைக்கும்.

திராவிடப் பண்ணை தரும்
தெவிட்டாத அமுது நிகர் புத்தகங்கள்!
பழக் கூடை
கலைஞர் கருணாநிதியின்
கவின்மிகு கதைக் குவியல்!
விலை ரூ. 1—0—0
*
கலித்தொகை தரும் -
- காதற் காட்சிகள்!
நாவலர் நெடுஞ்செழியனின்
வெல்லச்சொல் விளக்கவுரை!
*
திராவிடப் பண்ணை,
தெப்பக்குளம் : : திருச்சி.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 128, மவுண்ட்ரோடு, சென்னை-6.